


# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 5. இதழ் - 6. நவம்பர் - டிசம்பர் 2019



**R5809**
**(R5186)**

## Decorum in the House of God
## தேவனுடைய வீட்டில் நல்லொழுக்கம்

*"நீ தேவாலயத்துக்கு போகும் போது உன் நடையை காத்துக்கொள்; மூடர் பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்க சேர்வதே நலம்; தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1 )*

இங்கே ஞானி சொல்லர்த்தமான காலடியையோ அல்லது நடக்கிறதையோ கூறவில்லை, ஆனால் சில ஞானமான புத்திமதியை கொடுக்கிறார். அதைக் கேட்பவர்கள் நம்மைப்போல சரியானபடி புரிந்துகொள்வார்கள். அவர்கள் தங்கள் அனுதின வாழ்க்கையில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற பொருளுடையதாக இது இருக்கிறது என்பதை புரிந்து கொள்வார்கள்.

"நடையை காத்துக்கொள்." நீ எங்கே போகிறாய் என்பதைக் கவனி. தேவனுடைய வீட்டிற்கு போகும்போது ஒரு கடைத் தெருவுக்கு போகிறது போலவோ அல்லது பொழுதுபோக்கு இடத்திற்கு போகிறது போலவோ போகக்கூடாது. தேவன் தம்முடைய ஜனங்களை சந்திக்கிற இடமாக நினைத்துச் செல். ஞானி தேவனுடைய சபையில் கேட்கப்படுகிறதைக் குறித்து யூகிக்கிறார். மூடர் பலியிடுவதைப் போல பலியிட தயாராகாதீர்கள். இது, சிரிப்பு விளையாட்டுத்தனம், மூடத்தனமான பேச்சு மற்றும் கேலிப்பேச்சு இவைகளை குறிப்பதாக காணப்படுகிறது.

தற்காலத்தில் இந்த வசனம் தேவனுடைய பிள்ளைகள் அனைவராலும் மிகவும் சரியானபடி மனதிற்குள்ளே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பயபக்தி மிகவும் குறைந்து கொண்டிருக்கிறது. தேவன் நம்மை நித்திய வேதனையில் போடுவார் என்கிற பயம் நமக்கு இல்லாமல் போய்விட்டது. நமது பரம பிதா தம்முடைய சிருஷ்டிகளில் இப்படிப்பட்ட தீய எண்ணமுடையவராக இல்லை என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் சந்தை கடைக்கு போவது போல தேவனுடைய வீட்டிற்கு செல்லக்கூடாது. தேவன் தொழப்படுகிற எந்த இடத்திலும் நல்லொழுக்கம் அவசியம் என்ற உண்மையை அநேக கர்த்தருடைய பிள்ளைகள் அறியாதிருக்கிறார்கள்.

### பயபக்தியான நடத்தை வளர்க்கப்படவேண்டும்

தேவன் நிழலான கோயில்களில் இல்லை என்பதையும் தற்காலத்தில் நாம் தேவனை சபையில் பெற்றிருக்கிறோம் என்பதையும் நாம் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம். சபையின் அங்கங்கள் கூடுகிறது எங்கேயிருந்தாலும் அங்கே கர்த்தர் இருக்கிறதாக அவர் அறிவித்திருக்கிறார். தேவனுடைய ஆலயத்தை அமைக்கிற ஜீவனுள்ள கற்கள் சொல்லர்த்தமான கற்களால் செய்யப்பட்ட கோயில்களைப் போல முழுமையாக மரியாதை செலுத்தப்பட வேண்டும்.

நாம் ஒரு வீட்டின் வரவேற்பறையில் கூடினாலும் அல்லது ஒரு ஜெபக் கூடத்தில் கூடினாலும் அல்லது ஒரு சங்கீத சபாவில் கூடினாலும், தேவனுடைய பிள்ளைகள் கூடுகிற இடம் எதுவாக இருந்தாலும் அது பரிசுத்தமான ஒரு இடமாக ஆகிறது. அதை நெருங்குகிறவர்கள் யாராக இருந்தாலும் தனது நடவடிக்கையில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர் அதை அடைந்தபோது தான் எங்கே இருக்கிறேன் என்பதை அவர் உணர்ந்தவராக, அவர் கேட்க – கவனிக்க தயாராக வேண்டும் – கேளிக்கையுடன் அல்ல. பேச்சுக்கள் எல்லாம் போதிக்கக்கூடியதாக ஆவிக்குரிய வகையில் கட்டுகிறதாக இருக்க வேண்டும். இந்த வகையில் நாம் பேச இயலவில்லை என்றால், நாம் பிரசங்கத்தை கேட்பதும் பாட்டில் இணைவதும் பின் வெளியேறுவதும் நல்லது.

எப்படிப்பட்ட பேச்சு அங்கு கொடுக்கப்பட்டாலும், வெறும் அந்த இடத்துக்காக அல்லாமல் அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக பயபக்தியுடன் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட சகோதரனையும் ஒரு குறிப்பிட்ட சகோதரியையும் அழைத்து "அவர்கள் பாடுபடுவதை நாம் கேட்போம்" என்று கூறுவது சரியான நடவடிக்கை அல்ல.

பயபக்தியைக் காட்டிலும் கர்த்தருடைய பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இருக்கிறதா என்பதை நாம் அறிவோம். பயபக்தியில்லாத யாரையும் தேவன் அழைக்க மாட்டார். அந்த பண்பு பலமாக வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆனால் பயம் விரட்டப்பட்டபொழுது, பயபக்தி குறைவது இயல்பானதாக இருக்கிறது. நாம் தேவனுடைய வீட்டிற்கோ அல்லது தெய்வீக ஊழியம் நடக்கிற இடத்திற்கோ செல்லும்பொழுது இந்த விஷயத்தில் விசேஷித்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

### மற்றவர்களது உரிமைகளில் கவனம்

நாம் தேவனுடைய ஆலயத்துக்கு போகும்பொழுது நமது

நடக்கைகளை கவனித்தால் மட்டும் போதாது, நாம் என்ன எடுத்துச் செல்கிறோம் என்பதையும் கவனிக்க வேண்டும். குளித்துவிட்டு, சுத்தமான ஆடைகள் அணிந்து செல்ல வேண்டும். நம்மேல் எந்தவித துர்நாற்றமும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். சரியாக பயிற்றுவிக்கப்படாத குழந்தைகளையும் நாம் அழைத்துச் செல்லக்கூடாது. இப்படியாக மற்றவர்களை தொந்தரவு பண்ணாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகளை வீட்டில் விட்டுவர முடியாத நிலை இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் போது பெற்றோர் சுழற்சி முறையில் கூட்டங்களுக்கு வரலாம். குழந்தைகளது வருகை மற்றவர்களது ஆவிக்குரிய கவனத்திற்கு தடைகள் விளைவிக்குமானால் குழந்தைகளை அழைத்துச் செல்லாமல் தவிர்ப்பது நல்லது. கூட்டங்களில் குழந்தைகள் தொந்தரவு பண்ணாத வயது வரும் வரை குழந்தைகள் வீட்டில் விடப்படுவதற்கு ஒரு வழிவகை செய்யப்பட வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் செய்யும் காரியங்களில் பழக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கிறார்கள் என்பதை உணராதிருக்கிறார்கள். அவர்களது ஒவ்வொரு அசைவும் மற்றவர்களுக்கு தொந்தரவாக இருக்கலாம். மற்றவர்கள் தங்களது பொறுமைக்கு வந்த சோதனைகளை பெறுகிறார்கள்.

### காலம் தவறாமை குணலட்சண அபிவிருத்திக்கு ஒரு அடையாளம்

சிலர் தமது நடக்கைகளை மாத்திரமல்ல தங்களது கைக்கடிகாரத்தையும் கவனிக்க வேண்டிவர்களாக இருக்கிறார்கள். காலதாமதமாக கூட்டங்களுக்கு வருவது நீதி மற்றும் அன்பு என்ற இரண்டு கொள்கைகளுக்கும் இசைவில்லாதது. கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டிய வர்கள் அனைவரும் மற்றவர்களுக்கு நீதியாக குறித்த நேரத்தில் வரவேண்டும். சரியான நேரத்திற்கு கூட்டத்திற்கு வரும்படி தங்களது காரியங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். காலம் தவறாமைக்காகவும், மற்றவர்களை தொந்தரவு செய்யாதிருக்கவும் நாம் எடுக்கும் முயற்சிகளை தேவன் நிச்சயம் கவனிப்பார். இது குணலட்சண அபிவிருத்திக்கு ஒரு அடையாளம். இது அவரது அங்கீகாரத்தை பெற்று நம்மை தேவனுடைய ராஜ்யத்துக்கு தயார்படுத்தும். மற்றவர்களது உரிமைகளில் அலட்சியமாக இருப்பவர்கள் கிறிஸ்துவின் ஆவியில், அன்பின் ஆவியில் குறைவுபட்டிருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவின் ஆவியைப் பெறாதவர்கள், நன்கு அபிவிருத்தி அடையாதவர்கள் ராஜ்யத்தில் இடம் பெற மாட்டார்கள்.

அடங்காத குழந்தைகள், காலதாமதம் முதலானவைகள் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதிபடுத்துவதை நிர்ணயிக்கிறது. இதன்மூலம் நாம் கிரியைகளின்படி நியாயம் தீர்க்கப்படுகிறோம் என்றோ அல்லது, மற்றவர்களின் கிரியைகளை வைத்து அவர்களை நாம் நியாயந்தீர்க்க நமக்கு உரிமையிருக்கிறது என்றோ நாங்கள் அர்த்தப்படுத்தவில்லை. “நியாயந் தீர்க்காதே” என்று கர்த்தர் கூறினார். கர்த்தருடைய சித்தத்தை செய்யும்படியான நமது முயற்சிகள் நமது மனதின் விருப்பங்களுக்கு சமமாக இருக்கிறது என்பதை காண்பிக்க வேண்டும். இதற்கு இசைவாக நாம் வாழ தீர்மானித்து முயற்சியை அப்பியாசப்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நமது மாற்றத்தை அனுபவிக்கும் பொழுது, நாம் சந்தோஷமாக இருப்போம்.

R5809

## God’s Love For Israel
## இஸ்ரயேலருக்கான தேவனுடைய அன்பு

(ஓசியா 11 : 1–11)

*இஸ்ரயேல் மக்கள் ஒரு மகனாக தேவனால் கருதப்பட்டனர் – கலகம் செய்தல், சுயசித்தம் உண்மையற்ற தன்மை – தேவனுடைய தயவு நூற்றாண்டுகளாக அவர்களுக்கு தொடர்ந்தது – பாபிலோனில் இஸ்ரயேலின் சிறையிருப்பு – முன்னுரைக்கப்பட்டபடி தேவனுடைய கிருபைக்கு திரும்புதல்.*

*“மனுஷரை கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன்.” (ஓசியா 11:4)*

ஓசியா பத்து கோத்திரத்தாராகிய இஸ்ரயேலிலே பாபிலோன் சிறையிருப்புக்கு முன்னதாக சமாரியர்கள் எதிரியிடம் துன்பப்படும் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்து வந்தார். ஓசியா என்ற பெயர் இரட்சிப்பு என்பதை குறிக்கிறது. தீர்க்கதரிசனத்திற்கும் நன்றாக இசைந்திருக்கிறது. கர்த்தர் ஓசியாவின் மூலம் இஸ்ரயேலுக்கு அவர்களது தேசத்தின் அழிவும் சிறைப்படுதலும் சமீபமாயிருக்கிறது என்று தெளிவுபடுத்தினார். இது பாவத்திற்கான தண்டனை என்றும் அறிவித்தார். அந்த தீர்க்கதரிசனம் அவர்களுக்கான தேவனுடைய தயவையும், அவர் அன்பாக பொறுமையுடன் இருந்ததையும் கூறியது. மேலும் அது, அவரது அன்பு கடைசிவரை தொடரும் என்றும், முடிவில் அவர்களை ஆசீர்வதித்து எதிரிகளின் தேசத்திலிருந்து அவர்களை மீட்பார் என்றும் உறுதியளித்தது.

ஓசியாவின் சொந்த வாழ்க்கையின் அனுபவங்கள் ஓரளவுக்கு இஸ்ரயேலரோடு தேவனுடைய அனுபவங்களை சித்தரித்துக் காட்டியது. இஸ்ரயேலர்கள் தேவனுக்கு உண்மையாக இராததுபோல ஓசியாவின் மனைவி அவருக்கு உண்மையாக இருக்கவில்லை. தேவனுடைய கட்டளையின்படி ஓசியா மனைவியை திரும்ப ஏற்றுக்கொண்டார். ஜனங்களுக்கான தேவனுடைய அன்பு தொடரும் என்பதே இஸ்ரயேலுக்கான அவரது செய்தியாக இருந்தது. அதாவது அவர்கள் கர்த்தருக்கு உண்மையாயிராதிருந்தும், அவர்கள் தங்களது பாடங்களை கற்றுக்கொள்ளும் பொழுது, அவர்களை அவர் திரும்ப ஏற்றுக்கொள்வார். எகிப்திலிருந்து ஒரு பறவையைப் போலவும் பாபிலோனிலிருந்து பயந்த புறாவைப் போலவும் திரும்பிவர சந்தோஷப்படுவார்கள்.

## "கர்த்தர் உன்னை நேசித்தார்"

அன்பு தான் வேதாகமத்தின் கருப்பொருள். அதோடுகூட இது எச்சரிக்கைகள், வாக்குத்தத்தங்கள், அறிக்கைகள் மற்றும் நீதி, தயவு இவைகளின் வெளிப்பாடுகளையும் உடையதாக இருக்கிறது. தேவனுடைய குணங்களில் நீதி இல்லாதிருந்தால், அன்பு நீதியை புறக்கணித்திருக்கும். அப்படிப்பட்ட நிலைமையில் அவரை நம்பியிருந்த அனைவருக்கும் பயங்கரமான பேராபத்தாக இருந்திருக்கும். அது குணலட்சணத்தின் பலத்தை உறுதிசெய்வதற்கு பதிலாக பலவீனத்தை உறுதிசெய்திருக்கும். தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை ஆகியவை முழு இணக்கமாக இசைவாக கிரியை செய்கின்றன. இது அவர் மேல் நமக்கு நம்பிக்கையை, மதிப்பை, அன்பை தருகிறது. அவரது மாறா தன்மையை நாம் உணருவதால், இவையனைத்தும் அதிகரிக்கப்படுகிறது.

ஆதியிலிருந்து தேவன் தமது திட்டத்தை முன் அறிவித்திருந்தார். அவைகள் படிப்படியாக கனிந்து வருவதை நாம் காண்கிறோம். மனிதன் தன் சுயமார்க்கத்தின்படி நடக்க அனுமதிக்கப்படுவான் என்பதையும் அவன் பாவத்தில் விழுந்து அதன் தண்டனையாகிய மரணத்திற்கு செல்வான் என்பதையும் தேவன் முன்னறிந்தார். முழு உலகத்தின் பாவத்திற்கும் மீட்கும் பொருளாக ஏற்ற காலத்தில் தேவ ஆட்டுக்குட்டியை கொடுப்பது அவரது திட்டமாக இருந்தது என்பதையும் அவர் முன்னறிந்தார். மனுக்குலத்தின் மீட்பராக மகிமையடைந்த இரட்சகர் இருக்க வேண்டும் என்று எண்ணங்கொண்டு, பூமியின் வம்சங்கள் எல்லாம் முடிவில் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் முன்னறிந்தார். மறு சீரமைப்பு வேலைக்கு ஓர் ஆயிர வருடத்தை ஏற்பாடு செய்து, மேசியாவின் மகிமையின் ராஜ்யத்தில் அனைத்து மனுக்குலமும் ஏதேனில் இழந்த அனைத்திற்கும் திரும்புவதற்கும் தேவனைப் பற்றிய முழு அறிவிற்கு வருவதற்கும் முழு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்பதையும் முடிவில் கீழ்ப்படியாதவர்கள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் தேவன் முன்னறிந்தார். ஆரம்ப முதலே ஒவ்வொரு முழுங்காலும் முடங்குவதையும் ஒவ்வொரு நாவும் பாவ அறிக்கை செய்கிற மகிமையான பலனை மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான தேவையாக முன்னறிந்தார். இந்த முழு நிகழ்வுகளும் பிதாவினுடையதாக குமாரன் மூலமானதாக இருந்தன. (1 கொரிந்தியர் 8 :6)

இந்த மகா பெரிய திட்டத்தில் ஒரு பரிசுத்தவான்களின் கூட்டம், இலட்சோபலட்ச மக்களை ஆளுகை செய்து ஆசீர்வதிக்கிற இயேசுவின் ஆயிர வருட மகா வேலையில் இணைகிற ஞானத்தையும் தேவன் முன்னறிந்தார். தேவன் இரண்டு பரிசுத்தவான்களின் கூட்டத்தை பெற்றிருக்கும்படி தீர்மானித்தார். ஒரு வகுப்பார் பூமிக்குரிய மண்ணானவர்கள். இவர்கள், ராஜ்யத்தின் உதவியால் மனுக்குலம் அனைவரும் அடைய வேண்டிய நிலைமைக்கு உதாரணமானவர்கள். மற்ற பரிசுத்தவான்களின் வகுப்பார், இன்னும் மேலான நிலைமைக்கு உயர்த்தப்பட்டு மேசியாவின் மணவாட்டியாகவும் ராஜ்யத்தில் அவரது உடன் சுதந்திரராகவும் ஆவியின் சுபாவத்தில் இருப்பவர்கள். இந்த கனத்துக்குரிய நிலைகளை தூதர்களைக் கொண்டு தேவன் நிரப்பியிருக்க முடியும். அப்படி செய்திருந்தால் தூதர்கள் இப்படி ஊழியம் செய்யும் சந்தர்ப்பத்திற்காக மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்கள். எனினும் அதற்கு பதிலாக இந்த வகுப்பார்கள் மனிதர்களிடமிருந்து – பாவ மனிதர்களிடமிருந்து சேகரிக்க தீர்மானித்தார்.

## ஆபிரகாமின் சந்ததியை அழைத்தல்

எதிர்கால ஊழியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டவர்களை சேகரிக்க கர்த்தருக்கு முன்பாக அனேக வழிகள் இருந்தன. அவர் தெரிந்துகொண்டு வழி நடப்பித்துக் கொண்டிருப்பது புத்தியுள்ளவர்களை (ஞானமுள்ளவர்களை), உயர்ந்தவர்களை தெரிந்துகொள்ளுதல் ஆகும். முதலாவது மற்றவர்களைப் போல பாவியாயிருந்த ஆபிரகாமை அழைத்தார். ஆனால் அவர் தேவன்மேல் முழு நம்பிக்கை உடையவராகவும் தன்னால் முடிந்தவரை கர்த்தருடைய சரியான வழியில் நடப்பதில் பிரியமுள்ளவராகவும் இருந்தார். ஆபிரகாமின் வித்தே தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அமைக்கும் என்பதும் அந்த வித்தின் மூலமே சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்பதும் தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தமாக இருந்தது.

ஆபிரகாமின் வித்தை – மாம்சீக மற்றும் ஆவிக்குரிய – அபிவிருத்தி செய்ய ஏறக்குறைய நான்காயிரம் வருட காலப்பகுதி அர்ப்பணிக்கப்பட்டது. கர்த்தர் ஆபிரகாமிடம், **"உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகப் பண்ணுவேன்"** (ஆதியாகமம் 22:17) என்று கூறியபோது இரண்டு வித்துக்களும் மறைமுகமாக குறிப்பிடப்பட்டன. இப்படியாக வானத்து நட்சத்திரங்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தையும் கடற்கரை மணல் பூமிக்குரிய வித்தையும் குறிக்கிறது.

தேவன் ஆபிரகாமின் மாம்சீக வித்துடன் பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்பு கொண்டிருந்தார். அவர் அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தமும் அவர்களோடு செய்து கொண்ட நியாயபிரமாண உடன்படிக்கையும் அவர்களுக்கு பெரும் ஆசீர்வாதமாகவும், ஊக்கமளிப்பதாகவும், ஆதரவாகவும் இருந்தன. இஸ்ரயேலர்கள் பாவிகளாகவும், அபூரணராகவும் இருந்து மற்றவர்களைப் போல நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க முடியாமற்போனார்கள். எனினும் அதற்கு முயற்சித்தவர்களுக்கு உதவிகரமாக இருந்தது. பாபிலோனின் சிறையிருப்பு உள்ளடக்கிய பல்வேறு தண்டனைகள் இஸ்ரயேலருக்கு அவர்களது நன்மைக்கான பாடமாக இருந்தது. இயேசு மீட்பராக வந்தபோது உலக முழுவதிலும் மிகவும் பரிசுத்தமுள்ள ஜனங்களாகவும் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஜனங்களாகவும் இருக்கும்படியாக அந்த தேசம் ஆக்கப்பட்டது.

## "அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார்"

இயேசுவின் நாட்களில் இஸ்ரயேலின் பரிசுத்தம் வெறும் பக்திவைராக்கிய நிலையாக மட்டுமே இருந்தது. சோதனையில்

அவர்கள் நிலைநிற்கவில்லை. இஸ்ரயேலர் மட்டுமே இருதயத்திலும் நோக்கத்திலும பரிசுத்தமாயிருந்து தேவனுடைய வெகுமதியை உணரக்கூடியவர்களாகவும் இயேசுவின் சீஷர்களாக ஆகும்படியாகவும் இருந்தார்கள். மொத்தத்தில் சுமார் 25000 பேர் சீஷர்களானார்கள். பிறகு யூத பரிசுத்தவான்களுக்கு உடன் சுதந்தரர் ஆகும்படியான சந்தர்ப்ப கதவானது புறஜாதியினருக்கு திறக்கப்பட்டது. கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகும்படி தேவனுடைய செய்தி அவர்களுக்கும் கொடுக்கப்பட்டு அழைக்கப்பட்டார்கள். தேவனுடைய கிருபையிலிருந்து இஸ்ரயேல் தேசம் தள்ளப்பட்ட பிறகு இந்த வகுப்பார் கூட்டிச் சேர்க்கப்படுவது பதினெட்டு (தற்போது பத்தொன்பது) நூற்றாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. நாம் இப்பொழுது மகா உபத்திரவ காலத்தில் நுழைந்துகொண்டிருக்கிறோம். இது மேசியாவின் ராஜ்யத்தை ஆரம்பிக்கும் காலம். இந்த துன்ப காலத்தில் சபையானது முதலாம் உரிர்த்தெழுதலில் மகிமையடையும். அதன்பிறகு, யூதர்களிலிருந்தும் பிறஜாதிகளிலுமிருந்து தெரிந்து கொள்ளப்பட்ட ஆவிக்குரிய மணவாட்டி மேசியாவின் ராஜ்யத்தில் ஆயிர வருட ஆளுகையை தொடங்கும்.

ஆபிரகாமின் மாம்சீக வித்திற்கு தேவனுடைய கிருபை இன்னும் தொடரும். அவர்களது தண்டனையும், பாடங்களும் உலகத்தாரைக் காட்டிலும் வெகு சீக்கிரத்தில் மேசியாவின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள அவர்களை, தகுதிபடுத்தி தயார்படுத்தும். மேசியாவின் பூமிக்குரிய ராஜ்யத்தில் மாம்சீக இஸ்ரயேலர் இருப்பார்கள். அதில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் மற்றும் யோவான் ஸ்நானன் வரை அனைத்து பரிசுத்தர்களும் "பூமியெங்கும் பிரபுக்களாக" இருப்பார்கள். (சங்கீதம் 45:16) அவர்கள் ஆவிக்குரிய ராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளாக மானிட பரிபூரணத்தில் இருப்பார்கள்.

அதிகமான மாம்சீக இஸ்ரயேலர்களே முதலாவது இயற்கையான வழியில் தெய்வீக ஏற்பாடுகளுக்கு இணக்கமாக வந்து ஆசீர்வாதத்தை முதலாவது பெறுவார்கள். எனினும் வேத வாக்கியங்கள் கூறுவது போல சகல ஜாதிகளும் இஸ்ரயேலரை அடிப்படையாக கொண்ட ராஜ்யத்துடன் உறவுக்குள் வந்து ஆபிரகாமின் வித்தாகி ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். (எரேமியா 4:2 ; ஏசாயா 65:16; ஆதியாகமம் 12:3) கடைசியில் உண்மையான இஸ்ரயேலர்களாக மாறாத அனைவரும் அழிக்கப்படுவார்கள். இப்படியாக ஆபிரகாமின் வித்து பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் முடிவாக சேர்த்துக்கொள்ளும். அவர்கள் அனைவருக்கும் தேவன் நித்திய ஜீவனை அளிப்பார். தேவனுக்கு அந்நியராகவே இருக்கும் புறஜாதியினர் இருக்கவே மாட்டார்கள்.

**R5810**

## A Little Talk by the Way
## வழியிலே ஒரு சிறிய பேச்சு

*"நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளை நோக்குவானாக. இயேசு கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது (பிலிப்பியர் 2:25)*

பிலிப்பி சபையே, ஐரோப்பாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் சபையாக இருந்தது. அது ஒரு எளிய மற்றும் மிகவும் சிறிய ஆரம்பமாக இருந்தது. பிலிப்பி பட்டணம் மக்கேதோனியாவில் முக்கிய பட்டணங்களில் ஒன்றாக இருந்தது. (அப்போஸ்தலர் 16:9–14, 20,21) இந்த இடத்தில் கர்த்தருக்கு ஊழியம் பண்ண சந்தர்ப்பங்களை தேடி அப்போஸ்தலர் ஓய்வு நாளில் ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கே ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து சில ஸ்திரீகளுக்கு தேவனுடைய வார்த்தையை போதித்தார்கள். பிலிப்பிவில் சபையின் சிறிய ஆரம்பத்தைக் குறித்து டாக்டர் மெக்லாரன் கூறுகிறதாவது: "எக்காளம் ஊதாமல், எந்தவித மேளமும் கொட்டாமல் சில ஸ்திரீகளும் களைத்துப்போன வழிபோக்கர்களும் ஆற்றின் கரையிலே பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த காலை நேரத்தில் அங்கு இருந்த அற்பமான ஒரு யூதனும் சபைக்கு அவரது கடிதமுமே பிலிப்பி பட்டணத்தின் பெயர் பிரதானமாக நினைக்கப்படுவதற்கு காரணம் என்று சொல்லப் பட்டிருந்தால் அதன் மகா ஜனங்கள் எவ்வளவு ஏளனமாக சிரித்திருப்பார்கள்!"

பரிசுத்த பவுல் பிற்காலத்தில் எழுதிய கடிதத்தில் பிலிப்பி சபையின் பொதுவான குணலட்சணத்தை வெளிப்படுத்துகிறார். அப்போஸ்தலர் மற்ற சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் நாம் கவனிக்கிறதுபோல, எந்தவித கண்டனத்தையோ அல்லது திருத்துதலையோ பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் நாம் காண்பதில்லை. பிலிப்பியருக்கு அவர் எழுதிய கடிதம் அழகானதாகவும், அன்பானதாகவும் இருக்கிறது. மேலும் அது அவருக்கும், சபைக்கும் உள்ள நெருங்கிய ஐக்கியத்தை குறிப்பிடுகிறது. இந்த சபையானது நான்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அப்போஸ்தலருக்கு பண உதவி மூலமாகவும் ஆறுதலான வார்த்தைகளின் மூலமாகவும் தயவையும் ஊழியத்தையும் செய்திருப்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் தெசலோனிக்கேயாவில் இருந்தபோது அவர் இரண்டு தடவை அன்பளிப்பை பெற்றிருக்கிறார். இன்னும் அவர் கொரிந்துவிலிருந்த போது அவர்கள் அவருக்கு ஊழியம் செய்திருக்கிறார்கள். அவர் ரோமாபுரியில் சிறையில் இருந்தபோது அவர்கள் அப்போஸ்தலரை மறக்கவில்லை. அவருக்கு கடைசியான அவர்களது மனதை தொடும் அன்பின் நினைவுகூருதலை அவருக்கு கொண்டு வந்தவர் எப்பாப்பிரோதீத்து ஆகும்.

எப்பாப்பிரோ தீத்து என்ற இந்த சகோதரன்தான் சுவிசேஷத்தினிமித்தம் மரணத்திற்கு சமீபமாயிருந்தான்

என்பது ஞாபகப்படுத்தப்படும். மற்ற வழிகளில் மிகவும் குறைவான உதவி வந்தபொழுது கர்த்தருடைய ஊழியத்தில் அப்போஸ்தலருக்கு உதவியாக உண்மையாக ஊழியம் செய்ததினால் மரணத்திற்கு சமீபமானார். தீவிரமான இந்த வியாதியிலிருந்து அவர் மீண்ட பிறகு, அப்போஸ்தலர் பவுல் இந்த அழகான கடிதத்தை (நிருபம்) அவர் மூலமாக அனுப்பினார். (பிலிப்பியர் 2:25–28; 4:14–19; 2 கொரிந்தியர் 11:9)

### அப்போஸ்தலரின் அன்பான ஆலோசனை

அப்போஸ்தலருக்கு மற்ற சபைகளும் உதவி பண்ணியிருக்க வேண்டும். ஆக்கில்லா மற்றும் பிரிஸ்சில்லா போன்ற தனிப்பட்டவர்களும் உதவிபுரிந்து உண்மை என்பதை நாம் அறிவோம். ஆனால் பிலிப்பியர்களைப் போல் மற்ற சபைகள் அப்போஸ்தலருக்கு உதவி பண்ணியதாக எந்தவித பதிவும் இல்லை. மற்ற சபைகள் ஒரு பெரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள் என்பது தெளிவாகிறது. எருசலேம் முதலான பட்டணங்களில் இருக்கிற ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்படி அப்போஸ்தலர் சபைகளை கேட்டுக்கொண்டாலும் அவருக்கு தேவையிருக்கும் போது தனது சொந்த தேவைக்காக கேட்பதில்லை. எனினும் அவருக்காகவும் அவர் ஊழியம் செய்கிற கர்த்தருக்காகவும் அவர்கள் கொடுத்த சிறு உதவிகளை அவர் புகழ்ந்திருப்பார்.

நாம் அன்பு மற்றும் தாழ்மை என்பவைகளைப் பற்றிய பாடத்தை கவனித்துக் கொண்டிருக்கிற வசனத்தில் நாம் காண்கிறோம். இந்த கிருபைகளில் பிலிப்பியர்கள் குறைவுபடுவதாக எந்தவித பதிவும் இல்லை. ஆனால் அப்போஸ்தலர் இந்த ஆவியின் கனிகளின் முக்கியத்துவத்தையும் கிறிஸ்துவின் சாயலில் தொடர்ந்து முன்னேறுவதற்கு அதை தொடர்ந்து அபிவிருத்திப்பண்ண வேண்டியதின் அவசியத்தையும் அவர் கூறுகிறார். இந்த அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் சகோதர அன்பு மற்றும் அவர்களுக்கிடையேயான பாசத்தையும் பற்றிய புத்திமதியே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கூறுகிறதாவது: "ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் உண்டானால்." உருக்கம் என்பது மன உணர்ச்சியை, தயவை மனதுருக்கத்தை குறிக்கிறது. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாயிருக்கிற அனைவரிடமும் இந்த கிருபைகள் இருக்கிறதா என்று பதிலளிக்கும்படியான ஒரு சோதனையை அப்போஸ்தலர் பிலிப்பி சபைக்கு முன் வைப்பதுபோல காணப்படுகிறது. "இந்த ஆசீர்வாதமான கனிகள் கிறிஸ்துவுக்கு ஒப்பான குணலட்சணத்தின் ஒரு பகுதியாக உங்களுக்கு காணப்பட்டிருந்தால், நீங்கள் அனைவரும் இவற்றில் மென்மேலும் அபிவிருத்தி அடைய வேண்டும்" என்று அவர் சொல்லுவார்.

இந்த காரியத்தில் அவர்கள் சம்மதப்பட்டிருந்ததால் அங்கே ஒருவருக்கொருவர் கிறிஸ்துவுக்குள்ளான ஆறுதல், அன்பு, ஐக்கியம், தயவு ஆகியவை இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் அவர் கூறுகிறதாவது: நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்பும் உள்ளவர்களாயிருந்து ஒரே நோக்கம், ஒரு சபையாக கர்த்தரின் ஒரே சித்தத்தை உடையவர்களாகயிருந்து என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். எப்படிப்பட்ட ஒரு மகா சொற்றொடர்! அவரது சந்தோஷம் நிறைவாயிருக்கும்; அவர்களது தொழிலை அறிந்ததால் மாத்திரமல்ல. அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பையும் மன உருக்கத்தையும் காண்பிக்கிறதினாலும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக நல்ல ஐக்கியத்தில் இருக்கிறதினாலும் அவரது சந்தோஷம் நிறைவாயிருக்கிறது. அவர்களைப்பற்றிய எந்த காரியங்களைக் காட்டிலும் இவைகள் அவரது சந்தோஷத்தை நிறைவாக்கினது. இந்த நிலைமைகள் தான் அவர்களது கர்த்தர் மற்றும் ஆண்டவரின் பார்வையில் சந்தோஷத்துக்குரியதாகும். இந்த கருத்தை உறுதிப்படுத்தி அப்போஸ்தலர் யோவான் கூறுகிறதாவது "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்.?" (1 யோவான் 4:20)

### மற்றவர்களின் காரியங்களை கவனித்தல்

பரிபூரண ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் ஆவி பிலிப்பி சபையின் சீஷர்களிடையே பெறமுடியும். பணிவு என்கிற கிருபையை ஒவ்வொருவரும் வளர்க்க வேண்டும் என்று அப்போஸ்தலர் புத்தி சொல்லுகிறார். "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாதபடி" ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெரும்படிக்கு அவரது ஆவியின் மகா விரோதியாகிய சுயபுகழ் பாடுவதையும், தன்னை உயர்வாக எண்ணுவதையும் நீக்கிப் போட வேண்டும். சபையின் சக அங்கங்களின் திறமைகளையும் நல்ல குணங்களையும் பார்க்ககூடிய மனத்தாழ்மையை ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்று அவர் ஏவுகிறார். இந்த குணங்களை தங்களது சொந்த குணங்களை காட்டிலும் உயர்வாக எண்ண வேண்டும்.

மனத்தாழ்மையானது நாம் பெற்றிருக்கிற திறமைகள் அல்லது கிருபைகளை அறியாதிருப்பதை குறிப்பிடும் என்று கூற முடியாது. ஆனால் சபையானது தற்கால அபூரண நிலைமையில் இருக்கும்வரை யாராவது ஒருவரிடம் அனைத்து திறமைகள், அனைத்து தாலந்துகள் மற்றும் பரிசுத்த ஆவியின் கிருபைகளை உயர்ந்த அபிவிருத்தி அடைந்த நிலையில் எதிர்பாக்கவே முடியாது. ஆகையால் ஒருவர் மனத்தாழ்மை உடையவராக இருந்தால், மற்ற சகோதரரில் குறிப்பிட்ட விரும்பத்தக்க குணங்கள் அல்லது கிருபைகள் தன்னிடத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாக இருப்பதைக் காண்கிறார்கள். மற்றவர்கள் பெற்றிருப்பதை மதித்து அங்கீகரிப்பதில் அவர் சந்தோஷப்பட வேண்டும். ஒருவர் தனது சொந்த விருப்பத்தை அல்லது நலம் அல்லது சுகம் அல்லது தனது சொந்த திறமைகளை மட்டும் கவனித்து மற்றவர்களது விருப்பம், நலம் ஆகியவைகளை மறத்தல் அல்லது அசட்டை

பண்ணுதல் சுயநலத்தை வெளிப்படுத்தும். மேலும் பெருந்தன்மை, இரக்கம் மற்றும் அன்பின் ஆவியாகிய கிறிஸ்துவின் ஆவி இல்லாததைக் குறிக்கிறது. அன்பின் பரிசுத்த ஆவியினால் நாம் எந்த அளவுக்கு நிறைந்திருக்கிறோமோ அந்த அளவுக்கு தக்கதாக மற்றவர்களது நலம் மற்றும் சந்தோஷத்தில் விருப்பம் உடையவர்களாக இருப்போம். இந்த சிந்தை, மனச் சார்புதான் நமது பிரியமான இரட்சகர் பூமியில் நடந்தபோது ஆச்சரியத்தக்கதாக வெளிப்படுத்திக் காண்பித்தது. அதிலிருந்து அவர் மாறவில்லை, நாம் உறுதிப்படுத்துகிறோம். நாம் அவரைப்போல இருக்க வேண்டுமானால் நாம் இந்த நற்பண்புகளில் வளர்ச்சி அடைய வேண்டும். இறுதியில் நாம் மகிமையில் மணவாட்டி வகுப்பாராக இருக்க வேண்டும் என்றால், நாம் "தேவனுடைய பிரியமுள்ள குமாரனுடைய" நகலாக ஆக வேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கர்த்தராகிய இயேசுவை நமக்கு முன்பாக, நல்லடக்கம், சுயத்தை வெறுத்தல், அன்பு மற்றவர்களது விருப்பங்களுக்காக சுயத்தை மறத்தல் போன்றவைக்கு மாத்திரம் உதாரணமாக வைக்காமல், கர்த்தரின் பரிசு மற்றும் பலனை உதாரணமாக வைக்கிறார். பிதாவினால் நமது ஆண்டவர் உயர்த்தப்பட்டதை நமக்கு அவர் ஞாபகப்படுத்துகிறார். அதேபோல நாமும் உற்சாகப்படுத்தப்படுவோம். நமது ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்றி, தற்கால பலன்களை பலியிட்டு, சுயத்தை சிலுவையிலறைந்து, சத்தியத்தினிமித்தமும் தேவனிமித்தமும் உழைத்து ஆவியின் கனிகளை வளர்த்தால், அவருடைய சரீரமாக, அவரது மணவாட்டியாக, அவரது உடன் சுதந்தரராக அவரது எதிர்கால மகா வேலையிலும், மகிமையான சிங்காசனத்திலும், அவரது நாமத்திலும் பங்குபெறுவோம் என்று எதிர்பார்க்கலாம்.

### புத்திமதியின் முடிவான வார்த்தை

நமது பாடத்தில் வசனம் 12-17 வரை அப்போஸ்தலர் பிலிப்பி சபைக்கு அழகான புகழ் மாலையை சூட்டி அவர்களிடத்தில் தனது பெரிய அன்பை வெளிப்படுத்துகிறார். அவர்கள் விசுவாசத்தில் உள்ள தமது நம்பிக்கையை எப்படி அவர் வெளிப்படுத்துகிறார்! அவர்கள் கிறிஸ்துவின் சாயலை முழுமையாக அடையும்படிக்கு அவரது சொந்த ஜீவனை ஊற்றுவதில் அவர் எவ்வளவு சந்தோஷமடைந்தார். (வசனம் 17) "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்று அன்புடன் புத்திமதி கூறுகிறார். நெருக்கமான வழியில் ஆண்டவரை பின்பற்றும்போது முறுமுறுக்கக்கூடாது. அதன் நெருக்கத்திலும் அதன் கஷ்டத்திலும் குற்றம் கண்டுபிடிக்கக்கூடாது; அதை குறித்து சர்ச்சை செய்யக்கூடாது; தேவ கிருபையினால் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள வழியைக் காட்டிலும் வேறு வழியை தேடக்கூடாது. மாறாக, கிறிஸ்துவின் பள்ளியில் நமது வளர்ச்சிக்கு தேவையான அனுவபங்கள் என்ன என்பதை கர்த்தர் சரியாக அறிந்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து விசுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அவரது மகிமைக்காகவும் நமது உயர்ந்த நன்மைக்காகவும் நமது அனுபவங்களை அவர் மேற்பார்வையிடுகிறார் என்பதையும் தம்முடையவர்களுக்கு அவர் பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்களை மறக்கிறவர் அல்ல என்பதையும் சகலமும் (விசுவாச வழியில் வருகிற எல்லாம்) நமக்கு "நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்றும்" நாம் உணர்ந்து விசுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நமது தவறுகளும் இடறி விழுதலும் சரியானபடி பெறப்பட்டால் நமது ஆசீர்வாதத்திற்காக அவைகள் நீக்கப்படும்.

நம்பிக்கையும் விசுவாசமுமான இந்த மனச்சார்பு கர்த்தருடைய அநேக பிரியமுள்ள பரிசுத்தவான்களிடம் இருப்பதை நாம் காண்பதில் நாம் சந்தோஷப்படுகிறோம். இப்படியாக அன்பும் பிரியமுமான ஆண்டவரை பின்பற்றி, "ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்க வேண்டும்." இப்படியாக கர்த்தருக்குள் உங்களோடு இருக்கிறவர்கள், "நாம் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதும் இல்லை என்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் (நமது மாறுதல் வரும்பொழுது) உண்டாக வேண்டும்."

## R5805 Amos The Fearless Prophet
## ஆமோஸ் பயமற்ற தீர்க்கதரிசி
## (R 3423) (Seek the Lord and Ye Shall Live)
## (கர்த்தரை தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்)

(ஆமோஸ் 5 : 4-15)

நமது பாடம் ஆமோஸின் தீர்க்கதரிசனத்தைப் பற்றியதாகும். தேவன் கொடுத்த செய்தியை எழுதுவதற்கு முற்காலத்தில் தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருந்தவர். உண்மை, மோசே ஒரு தீர்க்கதரிசி, அவரது போதனைகளை எழுதப்பட்ட வடிவில் நாம் பெற்றிருக்கிறோம், தாவீது ஒரு தீர்க்கதரிசி, அவருடைய போதனைகளை சங்கீதங்களில் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் மோசேயின் தீர்க்கதரிசனங்கள் பெரும்பாலும் நிழலாக (முன்னடையாளம்) தெய்வீக இயக்கத்தில் கொடுக்கப்பட்டது. தாவீதின் தீர்க்கதரிசனம் செய்யுள் வடிவில் கொடுக்கப்பட்டது. நமது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் அவைகளை குறிப்பிட்டு கூறும்வரை அது தீர்க்கதரிசனம் என்று அறிந்து உணர்ந்துகொள்ள முடியாதிருந்தது. சாமுயேல் தீர்க்கதரிசி தேவனுடைய செய்தியை எழுதியதாக காணப்படவில்லை. எலியா, மற்றும் எலிசா இன்றும் மற்றவர்களும் அவர்களது

காலத்தில் எழுதவில்லை. ஆமோசின் காலம் எலியாவிற்கு ஒரு நுற்றாண்டிற்கு பிறகும், ஏசாயாவிற்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன்பும், எரேமியா, எசேக்கியேல் மற்றும் தானியேலுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்புமாகும். ஆமோஸ் தன்னை பிறப்பில் மிகவும் எளியவராக அறிவித்தார். அவரது பெற்றோர்கள் பிரசித்திபெற்றவர்கள் அல்ல; அவர் தீர்க்கதரிசிகளின் குமாரர்களோடு போதிக்கப்பட்டவரும் அல்ல. அவர் தாவீதைப் போன்று ஆடு மேய்ப்பவர், விவசாயி. அவர்மேல் கர்த்தர் தமது ஆவியை மிகுந்த வல்லமையுடன் ஊற்றி இஸ்ரயேலர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்களது அக்கிரமங்களுக்கு ஏற்ற தண்டனை, அழிவு அவர்கள்மேல் வரும் என்று அறிவிக்கும்படி அனுப்பினார்.

தீர்க்கதரிசியின் செய்தியின் உக்கிரம் இஸ்ரயேலின் பத்து கோத்திரத்திற்கு விரோதமாக விழுந்தது. ஆனால் காரியத்தை சொல்லுகிற தெய்வீக முறை குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. தீர்க்கதரிசியின் செய்தி பக்கத்து நாடுகளிலிருந்து ஆரம்பித்தது. (1) வடபுறத்திலுள்ள சிரியாவின் தலைநகர் தாமஸ்குவிற்கான தெய்வ தண்டனை குறிப்பிடப்பட்டிருக்கிறது; (2) மேற்கேயுள்ள பெலிஸ்தியர்கள்; (3) வடமேற்கிலுள்ள தீரு தேசம்; (4) தெற்கிலுள்ள ஏதோமியர்கள்; (5) கிழக்கே அருகிலுள்ள அம்மோனியர்கள் (6) தெற்கிலுள்ள மோவாபியர்கள்; (7) தெற்கிலுள்ள யூதர்; கடைசியாக தீர்க்கதரிசியின் செய்தியின் மையம் பத்து கோத்திரத்தார்களாகிய இஸ்ரயேல் ஆகும். அவரது செய்திக்கு இஸ்ரயேல் ஜனங்களின் கவனத்தை நாம் கற்பனை செய்து பார்க்கலாம். முதலில் சுற்றிலுமுள்ள அவர்களது எதிரிகளின் மேல் வருகிற துன்பங்களைப் பற்றிய வார்த்தைகள் இருந்தன. அவர் கூறின தேசங்களின் வட்டம் குறையக் குறைய தீர்க்கதரிசியின் சாட்சியம் விசேஷமாக அவர்களுக்கு எதிராக இருந்தது. இது அவர்களது கோபத்தை அதிகப்படுத்தியிருக்கும் என்று நிச்சயப்படுத்துகிறோம். ஆரம்பத்தில் "உண்மையான தீர்க்கதரிசி" என்று ஆரவாரித்த அவர்கள் முடிவாக அவருக்கு எதிராக பற்களை நறநறவென்று கடித்தார்கள். இஸ்ரயேலைப்பற்றிய இந்த கண்டனம் 3–6 அதிகாரங்கள் மற்றும் 7:9–17லும் காணப்படுகிறது. ராஜ்யபாரம் விழப்போகிறதை தீர்க்கதரிசி வெளிப்படையாக சொல்ல சென்றிருந்தபோது, பெத்தேலின் ஆசாரியனான அமத்தியா குறுக்கிட்டு, தன் சுய தேசத்துக்கு ஓடிப்போகும்படி ஆமோசை கட்டளையிட்டான். ஆனால் ஆமோலஸ் பரிசுத்த ஆவியின் விசேஷித்த வல்லமையின் கீழ், குறிப்பிட்ட செய்தியை அறிவிக்கும்வரை தன் நாட்டுக்கு திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். இன்னும் இஸ்ரயேலுக்கு வரும் தண்டனையைக் குறித்து கூறி ஆசாரியனின் வீட்டைப்பற்றிய சில தீர்க்கதரிசனங்களையும் கூறினார்.

## மாறிய நிலைமைகள்–மாறிய முறைமைகள்

ஆமோஸின் இந்த அனுபவத்திலிருந்து நாமும் தற்காலத்தில் ஒரு பாடத்தைப் பெறலாம். கர்த்தர் இதுபோல செய்தியை இனிமேல் கொடுக்கமாட்டார் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நிலைமைகள் மாறியுள்ளன, சூழ்நிலைகள் மாறியுள்ளன. பழங்காலத்தில் தேவன் பயன்படுத்திய முறைமைகளை தற்காலத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுவதில் பயன்படுத்துவதில்லை. இந்த தீர்க்கதரிசனங்களை மதித்து அப்போஸ்தலர் பேதுரு நமக்கு கூறுகிறபோது: "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்." (2 பேதுரு 1:21) "தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளை தெரிவித்தார்களென்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது." (1 பேதுரு 1:12)

தெய்வீக வல்லமையின் கிரியைகளும் நிலைமைகளும் மாறுபட்டிருப்பதினால், காதுள்ளவர்கள் கேட்கும்படி வசனத்தை போதிப்பது நம்முடைய வேலையாகும். பழங்கால தீர்க்கதரிசனங்கள் மற்றும் சாட்சியங்கள் மேல் கவனத்தை செலுத்தி, யாருக்காக இந்த தெய்வீக திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதோ அவர்களுக்கு அதை அறியப் பண்ண வேண்டும். இஸ்ரயேலருக்கு இதில் எந்த துரோகமும் இல்லை. யாராவது தற்காலத்தில் எலியாவையோ அல்லது ஆமோஸையோ அல்லது மற்ற பழங்கால தீர்க்கதரிசிகளையோ பின்பற்றினால் தெய்வீக சித்தம் மற்றும் செய்தியைப் பொருத்தவரை முற்றிலுமாக அது ஒரு தவறான எண்ணத்தை குறிப்பிடுகிறது. இது புத்தி சுவாதீனம் இல்லாததைக் குறிப்பதாகக் கூட யூகிக்கப்படக்கூடும். அப்போஸ்தலர் பவுல் அறிவிக்கிறதுபோல, நமக்கு தெரிந்தவைகளை பேசுகிறோம். முற்காலத்தில் நமக்காக சொல்லப்பட்ட புத்திமதிகளை உறுதிசெய்கிறோம். தீர்க்கதரிசி அந்த செய்தியை கொடுப்பதற்கு அவரை கர்த்தர் வழிநடத்திய முறைமையில் நமக்கு நல்ல ஒரு பாடம் இருக்கிறது.

நமது கர்த்தர் இந்த சுவிசேஷ யுகத்தில் அவருக்கு ஊழியம் செய்யும் முறைமைகளை தேர்ந்தெடுப்பதில் நமக்கு ஓரளவுக்கு சலுகைகளைத் தருகிறார். ஆனாலும் நாம் சர்ப்பத்தைப்போல ஞானமுள்ளவர்களாகவும், புறாவைப்போல கபடமற்றவர்களாகவும் இருக்கும்படி நமக்கு புத்திமதி கூறுகிறார். அவர் நம்மை விசேஷித்த விதமாக ஆசீர்வதித்து பயன்படுத்தும்படியாக, அவருடைய ஊழியத்தில் இப்படிப்பட்ட ஜாக்கிரதையை கடைபிடிக்கிற அளவுக்கு தக்கதாக பரிசுகளை வாக்குத்தத்தம் பண்ணுகிறார். தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட தாலந்துகள் மற்றும் ராத்தல்களை ஞானமாக பயன்படுத்தியதற்கு தக்கதாக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது பரிசுகளை பெறுவார்கள். சந்தர்ப்பத்தைப் போல ஞானமுள்ளவர்களாயிருங்கள் என்ற நமது ஆண்டவரின் கட்டளைக்கேற்ப நமது சுதந்தரத்தை அப்பியாசப்படுத்துவோமாக. அதோடு விரும்பத்தகாத, பயங்கரமான காரியங்களைப் பற்றிய தீர்க்கதரிசியின்

செய்தியை கவனிப்போமாக. அவைகள் உண்மையாகவும் கேட்பவர்களின் கவனத்தை திருப்பத்தக்கதாகவும் இருந்தன. அப்போஸ்தலர் பவுல் அதே ஞானத்தை அப்பியாசப்படுத்தி தம்மால் கர்த்தரைப்பற்றிய அறிவுக்கு கொண்டுவரப்பட்டவர்களுக்கு அதைத் தெரிவித்தார். அவர் கூறியதாவது: "உபாயமுள்ளவனாயிருந்து, தந்திரத்தினாலேயே உங்களைப் பிடித்தேனாம்." அதாவது உங்கள் இருதயத்தை மிகவும் கவரும் அளவுக்கு நான் விஷயங்களை உங்களுக்கு அளித்தேன். எனினும் சத்தியமில்லாததை அவர் கொடுக்கவில்லை. சத்தியமானது ருசிகரமாகவும் அல்லது பிடிக்காததாகவும் அறிவிக்கப்படலாம்.

## "கர்த்தாவே, கர்த்தாவே" என்று எல்லாரும் சொல்லவில்லை

இன்னொரு பாடம் ஆமோசின் செய்தியிலிருந்து நமக்கு கிடைக்கிறது. இந்த செய்திக்கு விரோதமாக மத காரியங்களில் ஈடுபட்டிருந்த ஆசாரியர்கள் எழும்பினார்கள். இதே போலவே நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களுடன் இருந்தது. ஆசாரியர்களும் மத போதகர்களுமே சுவிசேஷத்தின் தூய்மைக்கும் உண்மைக்கும் பிரதான எதிரிகளாக இருந்தனர் இதையே நம் நாட்களிலும் எதிர்பார்க்க வேண்டும். அறிவிக்கப்படுகிற சத்தியத்தின் தூய்மையைப் பொருத்து எப்பொழுது எதிர்ப்பு எழும்பும். அதுவும் "தேவபக்தியின் வேஷத்தை" தரித்தவர்களே பிரதான எதிர்ப்பாளர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவபக்தியில் குறைவுபட்டிருப்பார்கள். இஸ்ரயேலர்கள் தேவன் பக்கம் திரும்பி அவருக்கு இசைவாக வந்தால் அந்த அழிவை தடுக்கலாம், இல்லையெனில் அதை எதிர்பார்க்கவேண்டும் என்ற தீர்க்கதரிசியின் வேண்டுகோளில் நமது பாடம் இருக்கிறது. அந்த காலத்தின் சரித்திரம் யூதருக்கு மாத்திரமல்ல பத்து கோத்திர ராஜ்யத்திற்கும் ஒரு செழுமையான காலமாக இருந்தது. அந்த செழுமையானது பூமிக்குரியதாக இருந்தது. செல்வமானது பணக்காரர்கள் மற்றும் கனவான்களிடம் குவிந்திருந்தது. அவர்கள் ஏழைகளை அநீதியாக நடத்துகிறார்கள் என்றும் இதனிமித்தம் அவர்களுக்கு துன்பம் வரும் என்றும் கர்த்தரை தேடுகிறது மட்டுமே அவர்கள் தேசத்தில் வாழ்வதற்கான ஒரே வழி என்றும் தீர்க்கதரிசி அவர்களுக்கு எச்சரிப்பு செய்தார். அவர்கள் உதவியை பெத்தேல் அல்லது கில்கால் அல்லது பெயர்செபாவிலுள்ள மத அமைப்புகளை நாடுவது வீணாயிருக்கும். ஏனெனில் அவை களங்கப்பட்டிருந்தன. தீர்க்கதரிசி கூறியதுபோல இந்த அமைப்புகள் அனைத்தும் அந்த ஆபத்தில் அழியவிருந்தன. கர்த்தரோ நேர்மையான இருதயத்தை தேடுகிறார். இல்லையென்றால் யோசேப்பின் வீட்டாரை அக்கினி விழுங்குவதுபோல அழிக்கும். பத்து கோத்திர ராஜ்யத்தார் இங்கே யோசேப்பின் வீட்டார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் எப்பிராயீம் மற்றும் மனாசே கோத்திரத்தார் தேசத்தில் பலத்திருந்தார்கள். ஆகையால் அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால் யோசேப்பின் குடும்பத்தரராகிய பத்து கோத்திரத்தார் அழிக்கப்படுவார்கள்.

தீர்க்கதரிசி அவர்கள் ஆபத்தில் இருந்ததற்கு காரணமாக அவர்களது தவறுகளை குறிப்பிட்டு கூறுகிறார். அவர்களது நீதிமன்றத்தில் நீதி காட்டப்படவில்லை. அவர்களது நீதிமன்றத்தில் நீதியின் கனிகளுக்கு பதிலாக, ஏழையாக இருந்தால் கசப்பை, ஏமாற்றத்தையே பெற்றார்கள். அவர்கள் நீதியை பூமியின் கீழ் தாழத்தள்ளினார்கள். நியாயம் என்பது பிரதானமானதாக கவனிக்கப்படவில்லை. தீர்க்கதரிசி மேலும் கூறியதுபோல, லஞ்சம் மிதமிஞ்சி இருந்தது. செல்வமும், சக்தியும் மற்றும் செல்வாக்கும் கிட்டதட்ட எதையும் நிறைவேற்ற முடிந்தது. இதிலிருந்து மாறி விடுதலை கிடைக்க வேண்டும் என்றால், கர்த்தரிடம் திரும்பினால் மட்டும் நடக்கும். தெய்வீக வல்லமையை யோபு (9:9; 9:30,31)இல் சொல்லப்பட்ட அதே மொழியில் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். கர்த்தர் அறுமீனையும், மிருக சீரிஷத்தையும் உண்டாக்கினவர் என்றும், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவர் என்றும் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவர் பூமியின் மேல் பருவகாலத்தில ஊற்றுகிறார் என்றும், தீர்க்கதரிசி குறிப்பிட்டு கூறுகிறார். இந்த மகாதேவன் தான் அவர்களுக்கு தேவை. மற்ற அனைத்தும் அவருக்கு எதிராக ஒன்றுமில்லாமற்போகும்.

## கர்த்தர் தரித்திரர்களையும் ஏழைகளையும் கவனிக்கிறார்

தேவனுடைய வல்லமை எளியவர்களுடனும், ஒடுக்கப்பட்டவர்களுடனும் இருக்கிறது என்று வசனம் 9 கூறுகிறது. இது பலமுள்ளவர்களுக்கும் வல்லமையுள்ளவர்களுக்கும் எதிரான அழிவை குறிக்கிறது. அவர்கள் கண்டனத்தை வெறுக்கிறார்கள், நீதியை வெறுக்கிறார்கள். அவர்கள் அநீதியை கண்டனம் பண்ணுகிறவர்களை எதிர்க்கிறார்கள்.

வசனம் 11 மற்றும் 12, அநீதி அப்பியாசப்படுத்தபடுவதையும், அது நிறுத்தப்படவேண்டும், கைவிடப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறது. வசனம் 13, அந்த காலத்தில் இஸ்ரயேலரில் சிலர் பொதுவான அந்த மார்க்கத்தை அங்கீகரிக்கவில்லை என்றும், அவர்கள் குறைவாக இருக்கிறபடியால் அவர்கள் உறுதியற்றவர்களாயும். அமைதியாக இருக்க வேண்டியவர்களாவும் இருந்தார்கள் என்றும் கூறுகிறது. ஏனெனில் அது தீமையின் நாளாக இருந்தது. துன்பப்பட்டவர்கள் காப்பாற்றப்படாமல் இன்னும் துன்பப்பட்டார்கள். ஆனால் ஆமோஸ் கண்டனத்தை தெரிவிக்கும்படி கர்த்தரால் விசேஷமாக அனுப்பப்பட்டபடியால், அவர் அமைதியாக இருக்க முடியாது. தைரியத்துடன் அந்த செய்தியை கொடுப்பதே விவேகமானதாக இருக்கும். இதேபோல கர்த்தருடைய பிள்ளைகள் ஆமோசின் இடத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவரும் அநீதியை அப்பியாசப்படுத்துகிற பொது அதிகாரிகள் முதலானவர்களை வெளியரங்கமாக கண்டிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. நான் என்ன செய்தாலும், விவேகம், ஞானம் ஆகியவைகளை பயன்படுத்த வேண்டும். தற்காலத்தில் நம்முடைய வேலை

தேசங்களை கண்டிப்பது அல்ல, நமது நல்ல கிரியைகளை மற்றவர்கள் காணும்படி செய்து, பரலோகத்தில் இருக்கிற பிதாவை மகிமைபடுத்தும்படி நமது வெளிச்சத்தை பிரகாசிக்க வேண்டும். நமது கர்த்தர் ஜாதிகளை கண்டனம் செய்வார். அவர்களது பெருமையை தாழ்த்துவார், வல்லயையுள்ளவர்களை அவர்களது நிலைகளிலிருந்து கீழே தள்ளிப்போடுவார், ஏற்ற காலத்தில் தாழ்ந்தவனை உயர்த்துவார். இப்படியாக நமது கர்த்தர் அறிவிக்கிறார். அவர் தமது பிள்ளைகளுக்கு கூறுவதாவது: "நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்கு காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (செப்பனியா 3:8)

தீர்க்கதரிசி சொல்கிறதை கேட்கிறவர்கள், முழுவதுமாக சீர்திருந்த வேண்டும், தீமையை தேடாமல் நன்மையை தேட வேண்டும். பாவத்தை வெறுத்து நீதியை சிநேகிக்க வேண்டும் என்ற புத்திமதியோடு இந்த பாடம் முடிகிறது. அவர்கள் இவைகளை செய்தால், தாங்கள் தேவனுடைய ஜனங்கள் என்று கூறிக்கொண்டபடி தேவனுடைய வாக்குத்தத்தங்களை உண்மையில் தங்களுக்கு உரியதாக்கிக் கொள்வார்கள். தேவனுடைய தேவைகளை உறுதிப்படுத்தினால்தான் அவர்களது உரிமை கோரல் பொருத்தமாக இருக்கும். வேறுவழியில் இதை பெறமுடியாது. கர்த்தருடைய ஒழுங்குகள் மற்றும் தேவைகளுக்குள் வந்தால் அவர்களுடன் அவர் கிருபையாக இருப்பார். இல்லையென்றால் முன்னுரைக்கப்பட்ட தண்டனைகளையும் அடிகளையுமே எதிர்பார்க்க வேண்டும்.

இஸ்ரயேல் ஒரு நிழலான தேசம் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். ஆமோசின் தீர்க்கதரிசனத்துடன் இணைந்துள்ள எதுவும் அவருக்கும் அவரது காலத்தின் ஜனங்களுக்கும் பரந்த அளவில் பொருத்தமுடையதாக இருப்பதைக் காட்டிலும் நமக்கு பிரயோஜனமாக இருக்கிறதா என்பதை நாம் சரியானபடி அதிகமாக ஆராய்ந்திருக்கிறோம். அப்போஸ்தலர் பேதுருவின் வசனம் மற்றும் தீர்க்கதரிசனங்களிலுள்ள மற்ற உதாரணங்களில் இதை எதிர்பார்ப்பதில் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். உதாரணத்திற்கு, "அவருடைய எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படுவதில்லை" என்ற சொல் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் இந்த அறிக்கையின் உண்மையான நிறைவேறுதல் புரிந்துகொள்ளப்பட்டது. மறுமடியும் அவர், "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று கூறிய வசனத்தை தாவீதும், இஸ்ரயேலின் ஜனங்களும் எவ்வளவு குறைவாக புரிந்து கொண்டிருந்தார்கள், தாவீது ஒரு தீர்க்கதரிசி என்பதையும் இந்த வசனம் கிறிஸ்துவைப்பற்றியும் மரணத்திலிருந்து (ஷியோலிலிருந்து) அவரது உயிர்த்தெழுதலைப்பற்றியும் பேசுகிறது என்பதையும் அறியவில்லை. ஆமோஸ் கூறிய வார்த்தைகள் யாருக்காக சொல்லப்பட்டதோ அந்த ஜனங்கள் அதன் கருத்தை உணர்ந்துகொள்ளும்பொழுது, இந்த தீர்க்கதரிசனத்திலுள்ள குறிப்பிட்ட சில அம்சங்கள், இந்த யுகத்தின் முடிவில் இருக்கிற பெயரளவிலான இஸ்ரயேலருக்கு இன்னும் அதிக அளவில் நிறைவேறக்கூடியதாக இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

## திறமைசாலிகள் பூமியில் தீமையை முன்னமே தெரிவித்தார்கள்

நியாயம் தெருக்களில் விழுந்துவிட்டது, நீதி நுழைய முடியாது என்று சொல்வது நமக்குரியது அல்ல. ஏழைகள் மிதமிஞ்சி, நசுக்கப்படுகிறார்கள் அல்லது வரிவிதிக்கப்படுகிறார்கள் அல்லது கொள்ளையடிக்கப் படுகிறார்கள் என்று சொல்வதும் நமக்குரியதல்ல. மாறாக, "கிறிஸ்தவ மண்டலத்தின்" நீதிமன்றங்களில் நீதிக்குரிய காரியங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தாராளமாக நாம் கூறலாம். எப்படி ஒரு சாதாரண மனிதன் அநேக நீதியான, ஞானமான சட்டங்களையும் ஒழுங்குகளையும் கொண்டு வருகிறான் என்று சில சமயங்களில் நாம் வியப்படைந்திருக்கிறோம். அநீதியும், அநியாயமும் இப்பொழுது அதிகமாக தனிப்பட்ட தீமையின் மூலமாக அல்ல, நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற மாறிப்போன நிலைமையின் மூலமாக ஆகும். புதுயுகத்தின் ஆசீர்வாதங்கள் நமக்கு வருவது தனிப்பட்டவரது சுயநலத்தின் அடிப்படையிலான சமூக சூழ்நிலைமையின் கீழ் ஆகும். இந்த நிலைமை சிலரை பெரிய செல்வந்தர்களாகவும் அநேகரை எழைகளாகவும் ஆகும்படி கிரியை செய்யும் என்று நாம் பயப்படுகிறோம்.

ஒரு காலத்தில் சட்டப்பூர்வமாக செய்யும்பொழுது சட்டத்தின் கீழ் நியாயமாக இருந்தது, தற்காலத்தில் உலகத்தின் வல்லமை மற்றும் நிதிக்கட்டுப்பாட்டை மிகச்சிலரின் கைகளில் வைத்து பெருங்கஷ்டத்திற்கு கிரியை செய்கிறது. உண்மைதான், அந்த சில திறமைசாலிகள் அவர்களது தேவைகளிலும், நடத்தைகளிலும் இன்னும் மிதமானவர்களாக இருக்கிறார்கள், சிலர் இன்னும் பெருந்தன்மையுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால் வேதவாக்கியங்கள் இது நீண்ட காலம் நீடிக்காது என்றும் அவர்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ அவர்களது வல்லமையை மனுக்குலத்திற்கு பெரும் துன்பத்தை கொண்டுவரவும். அவர்களை இயந்திரக் கல்லில் அரைக்கும்படியாகவும் பயன்படுத்துவார்கள். இந்த கோணத்தில் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் கிறிஸ்தவ ஸ்தாபனங்களால் நன்றாக மதிக்கப்படும். ஆனால் வல்லமை மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆமோஸ் அல்லது வேறு யாருடையதையும் கேட்க தீர்மானிக்கவில்லை என்பதை நாம் நிச்சயிக்கலாம். வேதம் எல்லா இடங்களிலும் கூறுவது போல யாதொரு ஜாதியாரும் உண்டானது முதல் அக்காலம் மட்டும் உண்டாயிராத ஆபத்தின் காலத்தில் கிறிஸ்தவ தேசங்கள் சடுதியாய் கவிழ்க்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த போரில் அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கின கர்த்தர் பலவான்களுக்கு எதிராக கெடுக்கப்பட்டவர்களை பலப்படுத்துவார். அராஜகத்தில் கெடுக்கப்பட்டவர்கள் பலவான்களுக்கு எதிராக எழும்புவார்கள். வசனம் –9.

ஆமோசின் தீர்க்கதரிசனத்தின் முடிவில் இஸ்ரயேலின்

மீட்பையும் மனுக்குலம் முழுவதும் புறஜாதிகளும் சேர்த்து, அக்காலத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்றும் கூறுகிறது. இந்த தீர்க்கதரிசனத்தை குறிப்பிட்டு அப்போஸ்தலர் யாக்கோபு எருசலேம் ஆலோசனைக் கூட்டத்தில் இப்படியாகக் கூறுகிறார். "எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்கு பின்பு திரும்பிவந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் சீர்படுத்தி அதைச் செம்மையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாம் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்." (அப்போஸ்தலர் 15:16,17) இந்த தீர்க்க தரிசனம் நிறைவேறக்கூடிய காலப்பகுதியில் நாம் வாழ்கிறோம். தேவனுடைய ராஜ்யம் மறுமடியும் உலகில் ஸ்தாபிக்கப்படுதலின் கீழ் இஸ்ரயேலர் இழந்ததை திரும்ப பெறப்போகிறார்கள். இந்த தேவனுடைய ராஜ்யம் ஒரு காலத்தில் தாவீது ராஜாவால் நிழலாக குறிப்பிடப்பட்டது. ஆனால் உண்மையான ராஜ்யம் ''பிரியமானவராகிய'' மகா தாவீது ராஜாவால் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. மிகுந்த அனுகூலமான சூழ்நிலைகளில் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட போகிற அந்த பரலோக ராஜ்யத்தின் கீழ் பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையும்படிக்கு மற்ற மனிதர்களும் கர்த்தரை தேடும்படிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

**R5815**

# Upheld in the Evil Day
# தீங்கு நாளில் தாங்கப்படுதல்

*''உன் வழிகளிளெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காக தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள்.'' (சங்கீதம் 91:11,12)*

இந்த சங்கீதத்தின் முகவுரை, யேகோவாவின் மறைவிலிருக்கிற, சர்வ வல்லவரின் நிழலில் தங்குகிற சுவிசேஷ யுகத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்களுக்கு விசேஷித்த விதமாக பொருந்துகிறது என்பது தெளிவாக காணப்படுகிறது. இதே கருத்து நிழலான ஆசரிப்பு கூடாரத்தில் அடையாளமாக சொல்லப்படுகிறது. பரிசுத்தவான்கள் இருக்கிற மறைவான இடம் பரிசுத்த ஸ்தலம், பிரதான ஆசாரியனும் உதவி ஆசாரியர்களும் தவிர வேறு யாரும் நிழலான பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் நுழைய அனுமதிக்கப்படவில்லை. இஸ்ரயேலர்கள் அனைவரும் இந்த ஏற்பாடுகளுக்கு மிகவும் நெருங்கி இசைவாக வாழ்ந்தவரை, ஆசீர்வதிக்கப்பட்டார்கள். பரிசுத்த ஸ்தலம், மறைவான இடம் என்கிற ஒன்று இந்த சங்கீதத்தில் குறிப்பிடப்படுகிறது.

இயேசுவின் நாளுக்கு வரும்போது, உண்மையான பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் முதலில் நுழைந்தவர் அவரே என்று நாம் பார்க்கிறோம். யோர்தானில் அவர் தம்மை ஒப்புக் கொடுத்தபோது பரிசுத்தவான்களில் முதலாவதாக நுழைந்தார். அவர் தம்மை ஞானஸ்நானத்தில் அர்ப்பணித்த அந்த கணமே அவர் வெளியே பிரகாரத்தில் இருப்பதற்கு பதிலாக பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார். அவர் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து, சர்வ வல்லவரின் சூழலில் தொடர்ந்து இருந்தால், தேவனுடைய அனைத்து அருளும் அவருக்கு சாதகமாகவும் சகலமும் அவரது நன்மைக்கு ஏதுவாகவும் நடக்கும். ஆகையால் இயேசு தமது ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தபோது, அவர் இரண்டாம் திரையைக் கடந்து மகா பரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்திற்குள்ளே நுழைந்து விட்டார். (எபிரேயர் 6:19,20;9:24) அவர் மாம்சத்திலிருந்தபோது, தமது அனைத்து வழிகளையும் காத்துக் கொண்டபடியால், தேவனால் அவர் காக்கப்பட்டார்.அவர் கெத்சமனே தோட்டத்தில் இருந்தபோது பிதாவானவர் தம்மை ஒரு வகையில் வெளிப்படுத்தினார் என்பது நமக்கு அறிவிக்கப்படாதிருந்தாலும், தூதர்கள் வந்து நமது ஆண்டவருக்கு ஊழியம் செய்தார்கள் என்று நாம் அறிவிக்கப்பட்டிருக்கிறோம். தேவன் "தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்."(சங்கீதம் 104:4)

தேவன் யாரையும் எதையும் தமது பிரதிநிதியாகவும் தூதனாகவும் பயன்படுத்தகூடும். ஆனால் இயேசுவின் நாட்களில் மிகவும் சொற்பமான மானிட குடும்பமே நமது ஆண்டவருக்கு தேவனுடைய தேற்றும் தூதர்களாக பயன்படுத்த தகுதியுள்ளவர்களாக இருந்தார்கள். பெத்தானியை சேர்ந்த மரியாள் அவர்களில் ஒருத்தி. அவள் ஆண்டவரின் சிலுவை மரணத்திற்கு முன்னதாக பரிமள தைலத்தால் அவரது கால்களை கழுவி தனது தலை மயிரினால் அதை துடைத்தாள். அவரது மனம் இன்னும் ஐந்து நாளில் தாம் சிலுவையில் அறையப்பட போகிறோம் என்ற எண்ணத்தில் அமைதியற்று இருந்தபோது அவள் அவருக்கு ஆறுதல் அளித்தாள். யாரும் அதை புரிந்து கொள்ளவில்லை என்பதையும் யாருமே அவருடைய உணர்வுக்குள் நுழைய முடியவில்லை என்பதையும் அவர் உணர்ந்தார். ஆனால் மரியாளின் ஊழியம் ஆண்டவருக்கு விலையேறப் பெற்றதாக அவருக்கு ஊற்சாகம் ஊட்டுவதாக இருந்தது.

### நமது நாட்களுக்கு நுட்பமான சோதனைகள் விசித்திரமானது

கர்த்தர் ஆவிகளை–தூதர்களை, மனிதர்களை, இயற்கையின் சக்திகளை அவரது ஊழியர்களாக பயன்படுத்தியிருக்கிறார்.பிதாவானவர் நமக்கு,தமது பிள்ளைகளுக்கு சில செய்திகளை அனுப்ப விரும்பினால், நாம் பயன்படுத்த கற்றுக் கொண்டிருக்கிற கம்பியில்லா தந்தி மற்றும் தொலைபேசி மூலம் பேசலாம்.ஆனால் நமக்கு செய்தியை அனுப்ப இதை பயன்படுத்த தேர்ந்தெடுக்கவில்லை. எனினும் ஆவியின் கிருபைகளில் அபிவிருத்தி அடைவதின் மூலம், பரலோக ராஜ்யத்திற்கு தயார்படுத்தும் எண்ணத்தில், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டு வரும் வகுப்பராகிய அவரது அனைத்து பரிசுத்தவான்களின் மேல் அவரது விசேஷித்த மேற்பார்வை இருக்கிறது என்பது நமது

பாடம் கொடுக்கும் கருத்தாக இருக்கிறது. "உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் " விழும்போதும் கொள்ளை நோய் வரும் போதும் இந்த முழ சங்கீதமும் நமது காலத்திற்கு பொருத்தமாக இருக்கிறது. கொள்ளை ஒருவனை தாக்கும் போது அவன் உண்மையை அறிவதற்கு முன்னரே செய்து விடுகிறது. இதே போல் கிறிஸ்துவின் சரீரத்தின் பாத அங்கங்களாகிய நமக்கும் ஆவிக்குரிய கொள்ளை நோயாகிய விசேஷித்த சோதனைகள் மற்றும் ஆபத்தில் இருக்கிறோம்.

விசேஷித்த துன்பம் வருகிற காலத்தைப்பற்றி அனைத்து தீர்க்கதரிசிகளும் சொன்ன காலமாக நமது காலம் இருக்கிறது. கடந்த காலத்தில் ஊழியம் செய்கிற தேவனுடைய பிள்ளைகளுக்கு துன்பம் வந்திருக்கிறது. கடந்த காலத்தில் நியாயம் வெளியரங்கமாக இருந்தது. நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் ஒரு கோடு போடப்பட்டது. "நீ கர்த்தருக்கு ஊழியம் செய்வாயா அல்லது பாகலுக்கு ஊழியம் செய்வாயா" என்ற கேள்வி எழும்போது, சரியானதை கண்டு பிடித்து, "நான் கர்த்தர் பக்கம் இருப்பேன்" என்று தீர்மானிப்பது கஷ்டம் இல்லாதிருந்தது. ஆதிகால சபையின் காலத்தில், "நீ ரோமர்களுக்கு விசுவாசமாயிருந்து சகாயம் பெற விரும்புகிறாவா? அல்லது கிறிஸ்துவை பின்பற்றி துன்பத்தை அனுபவிக்கப் போகிறாயா?" என்ற கேள்வி இருந்தது. பதில் கிறிஸ்து அல்லது ரோமராஜா. இன்னும் பிற்காலத்தில், நீ இந்த சபைப்பிரிவா அல்லது வேறொரு சபை பிரிவா என்ற கேள்வி எழுந்தபோது, பிரச்சனை தெளிவாக வரையப்பட்டது. "நான் தேவன் பக்கமா அல்லது சத்துருவின் பக்கமா?" ஆனால் கடந்த நாற்பது (இந்த கட்டுரை 1915ல் எழுதப்பட்டது) ஆண்டு காலமாக சபைப்பிரிவுகள் நடைமுறையில் புறக்கணிக்கப்பட்டு கொண்டு வருகின்றன.

சில சமயங்களில் துன்பப்படுத்தப்பட்டவர்களின் துன்பத்திற்கு அவர்களே குறைகூறப்படுகிறவர்களாக இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் செய்த பிழைகள் கொடூரமானதாக இருந்தது. கடந்த காலங்களை பார்க்கும் போது சோதனைகளும் துன்பங்களும் தற்காலத்தைக் காட்டிலும் குறைவான நுட்பம் உடையதாக இருந்தன. தற்காலத்தில் இந்த பெரிய சபைபிரிவுகள் ஒரே அமைப்பாக இருக்கும்படி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். ஆயிரவருடயுகம் வந்துவிட்டதாக காணப்படுவது போல் இருக்கும். அதாவது சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து இருக்கும். பொதுவாக கிறிஸ்தவ ஜனங்களிடையே நல்லெண்ணமும், தீமையைக் காட்டிலும் நன்மை செய்ய வேண்டும் என்கிற விருப்பமும் காணப்படுகிறது. கொடூரமான துன்பங்கள் இழைக்கப்படுவதில்லை, திரளானவர்கள் அதை ஏற்பதுமில்லை.

கடந்த நாற்பது வருட காலம், அனைத்து கிறிஸ்தவ ஜனங்களுக்கும் கடுமையான சோதனை காலமாக இருக்கிறது. நுட்பமான போதனைகளாகிய ஆவி உலகம். கிறிஸ்தவ விஞ்ஞானம், பிரம்ம ஞானம் மற்றும் பல்வேறு வகையான புது கருத்துக்கள் பரவியிருக்கின்றன. இதே போல பரிணாமம் போன்ற கொள்கைகள் விரிவாக அறிவிக்கப்படுகிறது. படித்த மனிதர்கள் பரிணாம கொள்கையை உருவாக்கினர். மேலும் உயர் விமர்சனம் வேதாகமத்தை கிழிக்கின்றன. ஏனெனில் "ஞானம் என்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற" கொள்கைகள் பரவியிருக்கிறது. (1 தீமோ 6:20) இந்த தப்பறையான கொள்கைகள் எல்லா திசைகளிலும் விஷவாயுவைப் போல பரவியிருக்கின்றன. இவரது கருத்துப்படி நானூறு மில்லியன் கிறிஸ்தவர்கள் அதில் இருக்கிறார்கள். மற்ற அதிகாரிகளின் கணக்குப்படி எழுநூறு அல்லது எண்ணூறு மில்லியன் கிறிஸ்தவர்கள். இதில் கைக்குழந்தைகள், மன நோயாளிகள் அனைவரும் அடங்குவர். ஒரு நிமிட குழந்தையாயிருந்தாலும் ஐம்பது வயது உடையவராயிருந்தாலும் சபையின் அங்கங்களாக கணக்கிடப்படுகிறார்கள். ஏனெனில் சில நீர்த்துளிகள் அவர்கள் தலையின் மேல் தெளிக்கப்பட்டு சில வார்த்தைகள் அவர்களுக்குமேல் சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுவின் நாமத்தை பெயரிட்டு அழைக்கிற அதிக அறிவுள்ளவர்களிடையே தேவனுடைய வசனத்திலிருந்து விழுந்து போகுதல் அதிகமாக இருக்கிறது. இந்த சோதனை மிகவும் இரகசியமாக ஊடுருவுவதாகவும் அதிக காயத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. ஏனெனில் இவைகள் வேதாகம கலாசாலைகளிலிருந்து வந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கானோர் விழுந்து போயினர். அவர்கள் விழப்போகவில்லை, விழுந்துபோய் விட்டார்கள். அவர்கள் கர்த்தரின் வசனத்திலிருந்த நம்பிக்கை அனைத்தையும் இழந்துவிட்டார்கள். வெளியரங்கமாக ஊழியம் செய்யும் இரண்டு லட்சம் ஊழியர்களில் பத்து சதவிகிதத்தினருக்கு மேல் யாரும் வேதாகமத்தை, தேவனால் கொடுக்கப்பட்டது என்பதை விசுவாசிக்கவில்லை. இரண்டு இலட்சத்தில் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பேர் விழுந்து போய்விட்டனர். வேதாகமத்தின் மீது நம்பிக்கையை இழந்துவிட்ட அவர்கள் தேவனுடைய உறவிலிருந்தும் விழுந்துவிட்டார்கள். சிலர் எந்த விதத்திலும் உறவு கொண்டிருக்கவில்லை.

## இன்றைய நாளில் அநேககருடைய பொய்யான நம்பிக்கைகள்

வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகளை தவிர வேறு எதை தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்? நம்பிக்கை இன்மையும் உலகில் தேவன் இல்லை என்பதுமே அநேகரது நிலைமையாக இருக்கிறது. அவர் தங்களது சுய நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அது ஒரு வேதாகம நம்பிக்கையல்ல. பிரம்ப ஞானத்தினர் ஒரு நம்பிக்கையை பெற்றிருக்கிறனர். ஆவி உலக நம்பிக்கையாளர் ஒரு நம்பிக்கையை பெற்றிருக்கின்றனர். கிறிஸ்தவ விஞ்ஞானிகள் ஒரு நம்பிக்கையை கொண்டிருக்கின்றனர். அதே போல பரிணாமவாதிகளும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் அனைவருடைய நம்பிக்கையும் அடிப்படையற்றவை. மேலும் அவை சோதனை நாளில் விழுந்து போகும்.

பரிணாமவாதிகள் தாங்கள் நித்தியமாக வாழ்வோம் என்று

நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர்கள் ஒவ்வொரு நாளும் அதிகமாக கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது தாங்கள் இன்னும் அதிக புத்திசாலியான பிள்ளைகளை பெற முடியும் என்றும் அவர்கள் எல்லா குணங்களிலும் உயர்ந்தவர்களாக இருப்பார்கள் என்றும் கூறுகிறார்கள். இதன் பலனாக இந்த பிள்ளைகள் இன்னும் நீண்ட காலம் வாழ்வார்கள் என்றும் அவர்கள் இன்னும் ஞானமான பலமுள்ள பிள்ளைகளை பெறக்கூடியவர்களாக இருப்பார்கள் என்றும் கூறுகிறார்கள். இந்த பரிணாமவாதிகள் இன்னும் நீண்ட காலத்திற்கு பிறகு அவர்களது பிள்ளைகள் எல்லா சூழ்நிலைகளையும் பயன்படுத்திக் கொண்டு என்றென்றைக்கும் ஜீவிக்கக் கூடிய நிலைமையை அடைவார்கள் என்று நம்புகிறார்கள். நமது கருத்தில் இவர்கள் தேவனற்றவர்களாக நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களது ஊழியர்கள் இயேசுவைப்பற்றி பேசுவது உண்மைதான், ஆனால் அது வேதாகம் செய்தி அல்ல. இயேசுவின் வாழ்க்கை முறை, நாம் அதை பின்பற்றக் கூடிய அளவுக்கு, அவர் நமக்கு முன்மாதிரியாக, உதாரணமாக இருந்தார் என்று சொல்கிறார்கள். இப்படியாக அவர்கள் பேசுவதற்கு காரணம் என்னவென்றால் இந்த ஒழுக்க முறைகள் ஜனங்களின்மேல் நல்ல ஒரு விளையை ஏற்படுத்தும் என்பதேயாகும். இவர்கள் இயேசு கிறிஸ்துவைப் போல் வாழ்ந்திருந்தால், இவர்கள் ஜனங்களை கண்டனம் செய்து, அவர்கள் சுயநலத்துடனும் அறிவீனமாகவும் வாழ்கிறார்கள் என்றும் தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணுகிறார்கள் என்றும் கூறியிருப்பார்கள். இயேசுவை உதாரணமாக எடுத்துக் கொண்ட இதே ஊழியர்கள், இயேசு இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்ததால் தான் அவர் நீண்ட நாட்கள் வாழாமல் முப்பத்தி மூன்றறை வயதில் மரித்தார். என்பதை நன்கு அறிவார்கள். இயேசுவின் குணலட்சணம் மிகவும் சிறந்தது என்பதை ஒத்துக் கொள்வார்கள். ஆனால் அவரிடம் எந்த மீட்கும் பொருள் திட்டமும் இல்லை என்று கூறுவார்கள். இயேசுவின் முன் உதாரணத்தை பின்பற்றும்படி ஜனங்களை ஊக்கப்படுத்துவார்கள், ஆனால் சத்தியத்திற்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும் ஜீவனை அளிக்க ஊக்கமளிக்க மாட்டார்கள்.

தங்கள் நாடு போருக்கு வரும்படி அழைத்தாலோ அல்லது அவர்களது ஊழியர்கள் போருக்கு செல்லும்படி போதித்தால் மட்டுமே போருக்கு செல்லலாமே ஒழிய மற்றபடி போகக் கூடாது என்று ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள். போருக்கு செல்வது பிரபலமாகிவிட்டிருந்தால் போரில் கலந்து கொள்ளச் சொல்வார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் போதகர்கள் சிறு பையன்களை ஸ்கவுட் (Scout) மற்றும் பிரிகேட்ஸ் (Brigades) போன்றவைகளில் சேர்த்து பயிற்சி கொடுப்பார்கள். போர் வரும்போது, இந்த இளைஞர்கள் தங்கள் தோளில் துப்பாக்கியை சுமந்து போருக்கு செல்வார்கள். அவர்கள் போரை நடத்தி தங்கள் நாட்டிற்காக போரிடுவார்கள். அவர்களது ஜனங்கள் காயம்பட்டவர்களை காயங்கட்டி சுகப்படுத்தி போருக்கு மறுபடியும் அவர்களை தயார்படுத்துவார்கள். ஒருவேளை அவர்கள் கொல்லப்படவும் கூடும்.

## தற்போது மதநம்பிக்கையின்மை எங்கும் பரவியிருக்கிறது

இதற்கெல்லாம் காரணம் மதபோதனையின் குழப்பமே. இது வந்ததற்கு காரணம் ஜனங்களுக்கு வேதாகமத்தில் நம்பிக்கை குறைந்து போனதே ஆகும். அவர்களது விசுவாசத்தைக் குறித்து நாம் விசாரிக்கும் போது, அவர்கள் கூறுவதாவது: ''நாங்கள் இயேசுவின் வார்த்தைகள் அனைத்தையும் நம்புகிறோம்.'' சில வெளியீட்டாளர்கள் இந்த கோணத்தில் நடக்க புதிய ஏற்பாட்டை அச்சடிக்கும் போது இயேசுவின் வார்த்தைகளை மாத்திரம் சிவப்பு நிறத்தில் போட்டு, இயேசுவின் வார்த்தைகளை மாத்திரம் படிக்க விரும்புகிறவர்கள் சிவப்பு நிறத்தில் உள்ள எழுத்தை மட்டும் படிக்கும்படி வழி செய்கிறார்கள். ஆனால் நீங்கள் நோவா காலத்தில் நடந்த ஜலப்பிரளயத்தை நம்புகிறீர்களா என்று கேட்டால், ''இல்லை, எங்கள் மனது எது நியாயமானது என்று சொல்லுகிறதைத்தான் நாங்கள் நம்புவோம். மற்றவைகளை அர்த்தமற்றதாக எண்ணுகிறோம்" நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளை நோக்குவானாக. இயேசு கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது (பிலிப்பியர் 2:25. உண்மையென்ன வென்றால், அவர்கள் இயேசுவின் மேல் உண்மையான விசுவாசம் வைக்கவில்லை. தமது மாம்சீக வாழ்வு எதற்கு என்று அவர் அறிவித்ததையும் அவர்கள் நம்பவில்லை. அவர் பாவத்திற்கு ஒரு பலியாக வந்தார் என்பதை விசுவாசிக்காமல் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். விசுவாச நிலையிலிருந்து அவர்கள் விழுந்துவிட்டார்கள்.

இப்பொழுது ஜனங்களின் போதகர்களே விழுந்துவிட்டால், நானூறு மில்லியன் அல்லது எண்ணூறு மில்லியன் ஜனங்களுக்கு நாம் என்ன சொல்லுவோம். சிலர் ஒரு சபைப்பிரிவில் இருக்கலாம். மற்றவர்கள் வேறு ஒரு சபைப்பிரிவில் இருக்கலாம். ஆனால் மொத்தத்தில் அவர்கள் அறியாமையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். எவ்வளவு பள்ளிகள், மற்றும் கல்லூரிகள் இருக்கின்றன என்று நாம் நினைத்துப்பார்க்கும் பொழுது எண்ணிக்கை சரியானதாக இல்லாதிருக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால் சிறு பகுதியினர் மட்டுமே கல்லூரியிலும் சரி, உயர்நிலைப்பள்ளியிலும் சரி சரியான பாடத்தை பெறுகிறார்கள். அதற்கு முந்தைய காலங்களில் வஞ்சிக்கப்பட்டவர்கள் பக்கமே இருந்தார்கள். தற்காலத்தில் நமது பெரிய கலாசாலைகளில் பெரும்பாலனவை தெய்வ நம்பிக்கையின்மையின் நாற்றாங்காலாகவே இருக்கின்றன. வேதாகம சத்தியம் ஜனங்களிடமிருந்து பிரித்தே வைக்கப்படுகிறது. கல்லூரிகள் லட்சக்கணக்கான பண உதவி பெற்று, படித்த பேரோசிரியர்களை

பெற்று, கிறிஸ்தவ உலகம் என்று அழைக்கப்படுகிறவர்கள், பேர் சபையின் இரண்டு லட்சம் ஊழியர்களின் கீழ், ஆச்சரியம் என்னவென்றால் அனைவரும் தெய்வ நம்பிக்கையில்லாதவர்களாக ஆகவில்லை என்பதே

இந்த கண்ணோட்டத்துடன் கடந்த நாற்பது வருடங்களில் இந்த சங்கீதத்தின் ஒரு நிறைவேறுதலைப் நாம் பார்க்கிறோம். ஆயிரம் பதினாயிரம் பேர் விழுந்திருக்கிறதை. நாம் பார்க்கிறோம். அவர்கள் எங்கே விழுந்தார்கள் என்பதையும் ஏன் விழுந்தார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். சிலர் மட்டுமே கிறிஸ்துவின் பாத அங்கமாக நிற்கிறார்கள். நாம் உலகத்தை உற்று நோக்கும்போது, ஆயிரக்கணக்கானவர்களைப் பார்க்கும் போது, கர்த்தருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்திருக்கிற சிலர் மட்டுமே நிற்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிறோம். இவர்களிலும் அநேகர், இந்த வாழ்க்கையின் சுமையினாலும், ஐசுவரியவான்களின் வஞ்சகங்களினாலும் தப்பறையான போதகங்களினாலும் பயப்படும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களும் உறுதியாக நிலைத்திருக்க முடியாதிருக்கிறார்கள். இவர்களுக்கு நமது உதவி தேவைப்படுகிறது.

## சர்வாயுத வர்க்கத்தின் அவசர தேவை

அப்போஸ்தலர் பவுல் கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரையும், ''தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று தூண்டுகிறார். அவர்களில் சிலர் அதிகமான தேவனுடைய சர்வாயுதங்களை பெறாமல், இருண்ட காலத்தின் விசுவாச அறிக்கைகளையே பெற்றிருக்கிறார்கள். அவர்களில் சிலர் உயர் விமர்சனம், பரிணாமம் முதலான நவீன தப்பறையான போதகங்களின் கீழ் இருக்கிறார்கள். திடமான விசுவாசம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ''கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்துவதற்கு'' பதிலாக பலவீனமாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் பலப்பட வேண்டிய காலமிது. அப்பொழுதுதான் தற்போது நம்மேல் இருக்கிற ''தீங்கு நாளில்'' நிற்க முடியும் அவர்கள் ''நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை தொடுத்தவர்களாயும், விசுவாசம் என்னும் கேடகத்தையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் உடையவர்களாயிருக்க வேண்டும்.'' (எபேசியர் 6:10–17)

நாம் ''தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும்,'' தரிந்தவர்களாயும் ஆவியின் பட்டயத்தை நன்கு திறமையுடன் கையாளக் கூடியவர்களாயும் இருக்கிறோம். நாம் ஆவியின் பட்டயமாகிய தற்காலத்துக்குரிய சத்தியத்தை தேவனுடைய வசனத்திலிருந்து எடுத்து, ஜெயங்கொள்ளப்போகிற அனைவருக்கும் பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர்கள் சர்வாயுதவர்க்கத்தையும் சீக்கிரமாக தரித்துக் கொள்ள உதவி தேவைப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். இதன் மூலம் பருமனாகவும் வேகமாகவும் பறந்து கொண்டிருக்கிற சத்துருவானவனின் அஸ்திரத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் மிகுதியாக ஒவ்வொருவரிடமும் இருக்கிற தவறுகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளவும் கூடும். இன்னும் அவர்கள் அவர்களது தற்காலிக விழுகையிலிருந்தும் தூக்கி நிறுத்தப்பட்டு கர்த்தரில் பலமடையப் பெறுவார்கள்.

## பணிவிடை செய்யும் தூதர்கள்

இந்த 91ஆம் சங்கீதம் தற்காலத்தை படம்பிடித்து காண்பிப்பது போல் இருக்கிறது. நமது பாடத்தில் குறிப்பிடப்பட்ட தூதர்களை போல ஆவதற்கு நாம் பாடுபட வேண்டும். இந்த தூதர்கள், ஊழியர்கள், தேவனுடைய சிறப்பான புத்திரர்கள். அவர்கள் சகோதரர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். இதுவே சுவிசேஷ யுகம் முழுவதற்கும் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொடுக்கக் கூடிய உயர்ந்த கனமாகும். நமது கர்த்தரின் காரியத்தில் ஆவியின் ஜீவிகளாகிய தூதர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள். சில அப்போஸ்தலர்களின் காரியங்களில் தூதர்கள் தோன்றி சில குறிப்பிட்ட நேரங்களில் ஊழியம் செய்தார்கள். வேத வாக்கியங்கள், உண்மையிலே ''தூதர்கள் அனைவரும் இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களுக்கு பணிவிடை செய்யும் ஆவிகள்'' என்று அறிவிக்கின்றன. தேவனுடைய பிள்ளைகள் மூலமாய் செய்யப்படக் கூடிய வேலைகளை ஆவியின் ஜீவிகளைக் கொண்டு தேவன் செய்வார் என்று எதிர்பார்ப்பது நியாயமானதாக இருக்காது.

இந்த சங்கீதத்தின்படி, ''பாத'' அங்கங்கள் விசேஷித்த இடறுதலின் ஆபத்தில் இருப்பதாகவும், ஆகையால் அவர்களுக்கு விசேஷித்த உதவி தேவை என்பதையும் நாம் இப்பொழுது காண்கிறோம். தற்காலத்தின் பல்வேறு கண்ணிகள் குறிப்பாக விளக்கப்பட்டிருக்கிறதற்கு பிறகு, நாம் வாசிக்கிறதாவது: ''உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்.'' நமது ஆண்டவர் தமது முதலாம் வருகையில் தாம் இஸ்ரயேல் வீட்டாருக்கு தடுக்கலின் கல் என்று கூறியதை ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்திருக்கிறார். (மத்தேயு 21:42–45) இயேசு இஸ்ரயேலின் இரண்டு வீட்டாருக்கும் தடுக்கலின் கல்லாக இருப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியிருப்பதை அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகிறார். (ஏசா 8:14 ; ரோமர் 9:32, 33)

நமது கர்த்தர் மாம்சீச இஸ்ரயேலின் வீட்டாருக்கு தடுக்கலின் கல்லாக அவர்களது நாற்பது வருட அறுவடை காலத்தில் இருந்தார். இதே போல முன்னுரைக்கப்பட்டபடி கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் தடுக்கலின் கல்லாக இந்த அறுப்பில் இருக்கிறார் என்று நாம் பார்க்கிறோம். யூத அறுப்பில் அவரது பிரசன்னமும் அவரது வேலையும் புரிந்து கொள்ளப்படவோ ஏற்றுக் கொள்ளப்படவோயில்லை. அதே போல் இங்கேயும் நமது ஆண்டவரின் பரோசியா, அதாவது பிரசன்னம் விசுவாசிக்கப்படவில்லை. அவரது மீட்கும் பொருள் மறுக்கப்படுகிறது. இந்த காலத்தின் நிகழ்வுகள் அவரது பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. இந்த காரியங்களும் வேத வாக்கியங்களின் முக்கிய சத்தியங்களும் இப்பொழுது மிகவும்

தெளிவாகவும், எப்பொழுதுதைக் காட்டிலும் அதிக வெளிச்சமாகவும் இருக்கிறது. இது உலகத்திற்கு தடுக்கலின் கல்லாகவும், விழித்துக்கொண்டிருக்கிற விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இந்த படிக்கல்லின் மேல் ஏறி உயர்வாக சென்று உயர்ந்த கண்ணோட்டத்திற்கு சென்றிருக்கிறார்கள். ஆகையால் தடுக்கலிலிருந்து விலகியிருக்கிறார்கள். மீட்கும் பொருளின் போதனையும் ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னத்தின் ரூபகாரங்களும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இந்த காலத்தில் சொல்லமுடியாத உதவிகரமாக இருக்கின்றன.

### நமது வசனத்தின் தற்கால நிறைவேறுதல்

நமது வசனத்தின் ''கல்'' என்பது ஒரு அடையாளமான கல் என்பதை நாம் காண்கிறோம். சாத்தான் இயேசுவை சோதிக்கும்போது இதை சொல்லர்த்தமான கல்லாக எடுத்துக்கொண்டு தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து அவரை குதிக்கச் சொல்லுகிறான். ஆனால் இயேசு ''அப்பாலே போ சாத்தானே'' என்று கூறுகிறார். வேத வாக்கியங்களின்படி செய்து பார்க்க மறுத்தார். ஆனால் அதன் நிறைவேறுதலை தற்காலத்தில் நாம் பார்க்கிறோம். கர்த்தர், தூதர்களையும் தூதுவர்களையும் எழும்பப்பண்ணி ''பாத'' வருப்பாருக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்படி பண்ணுகிறார். இந்த தூதுவர்கள் பல்வேறு வகையானவர்கள். தற்கால சத்தியச் செய்தி அச்சடிக்கப்பட்டு பல்வேறு மொழிகளில் பூமியின் அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் பாத அங்கங்களை தேடவும், அவர்களை நிலைநிறுத்தவும் ஆகும். ஆயிரக்கணக்கானோர். தாங்கள் பெரிய ஆபத்தில் இருந்தபோது அதிலிருந்து மீட்கப்பட்டதை தொடர்ந்து நமக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் முன்னரே அவநம்பிக்கைக்கு சென்று விட்டனர். அநேகர் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்கிற அனைத்து விசுவாசத்தையும் இழந்து விட்டனர். ஆனால் இன்றைக்கு அவர்கள் கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுகிறார்கள்.

தேவன் இந்த தூதுவர்களை அப்பொழுது பயன்படுத்தியிருக்கிறார். அவரது இந்த பணிவிடை செய்யும் ஆவிகள் தான் அவரது ஜனங்களுக்கு ஊழியம் செய்திருக்கிறார்கள். அதிலே காணக்கூடாத தூதுவர்களும் இருந்திருக்க மாட்டார்கள் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் காணக் கூடிய தூதுவர்களை நாம் பார்த்திருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். எனவே நமது பாடத்தின் வசனம் நம் அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியை கொண்டுள்ளது. ''உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.'' தேவனுடைய பிள்ளைகளுக்கு அதிசீக்கிரத்தில் எப்படிப்பட்ட துன்பங்கள் வந்தாலும், ஒரு விசேஷித்த ஆறுதல் இருக்கும். நல்ல உள்ளம் படைத்த அவரது அனைத்து பிள்ளைகளுக்கும் முழுமையாக தேவையானவைகளை கொடுக்கக் கூடியவராக கர்த்தர் இருக்கிறார். அப்படிச் செய்வார் என்பதை நினைவுகூர வேண்டும். இந்த தூதுவர்களை அவர் தொடர்ந்து பயன்படுத்துவார். பாதையின் முடிவு வரைக்கும் அவரது ஜனங்களை பலப்படுத்துதல் இருக்கும். இப்படி யாராவது வழிநடத்தப்படவில்லையென்றால் அதற்கு காரணம் அவர்களிடத்தில் ஏதோ தவறு இருக்கிறதேயாகும். ''பொல்லாப்பு உனக்கு நேரிடாது.'' (சங் 91:10) இந்த ''உனக்கு'' வகுப்பாராக இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். தெய்வீக பாதுகாப்பு நமது ஓட்டம் முடியும் வரை இருக்கும் என்பதே இதன் பொருள்.

## R 5817 God's Mercy To Israel and To Others

## இஸ்ரயேலருக்கும் மற்றவர்களுக்கும் தேவனுடைய தயவு

*இஸ்ரயேல் ஒரு கிருபையான தேசம் – நியாயப்பிரமாண உடன்படிக்கையில் தேவனுடைய தயவு – ஆவிக்குரிய இஸ்ரயேலர் ஒரு புது தேசம் – ராஜரீக ஆசாரியத்துவம் – மற்ற தேசங்கள் தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை – முடிவில் தேவ தயவு எப்படி அனைத்து தேசங்களுக்கும் சென்றடையும்.*

*''கர்த்தர் உருக்கமும், இரக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.'' சங்கீதம் 103:8*

வேதமாணவர் என்ற வகையில் நமக்கு உள்ள ஒரு கஷ்டம் என்னவென்றால், கடந்த காலத்தில் வேதத்தைக் குறித்தும் தெய்வீக குணலட்சணத்தைக் குறித்தும் ஒரு குறுகிய கண்ணோட்டத்தில் இருந்தோம் என்பதே ஆகும். பன்னிரண்டு நூற்றாண்டுக்களுக்கு மேலாக வேதாகமம் ஆராய்ச்சி பண்ணப்படவில்லை. அதற்கு பதிலாக இயேசு கிறிஸ்து நியமித்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களைப் போல (யூதாஸ் இடத்தை பரிசுத்த பவுல் எழுத்துக் கொண்டார்) தங்களுக்கும் முழு அதிகாரம் உண்டு என்று சில குறிப்பிட்ட பிஷப்புகள் வேதாகமத்திற்கு மாற்றாக வேறு காரியங்களை உண்டு பண்ணினார்கள். விசுவாச பிரமாணம், மதக் கோட்பாடுகள் போன்றவைகள் தான் இந்த மாற்றுகள். இவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வேதாகமம் ஒதுக்கப்பட்டது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவனுடைய பிள்ளைகள் அவரது வசனத்தின் உண்மையான போதனைகளிலிருந்து மிகவும் தூரமாக இருந்தது ஆச்சரியப்படத்தக்கதல்ல. சீர்திருத்த காலத்தில் வேதாகமம் ஜனங்களுக்கு திரும்பி வர ஆரம்பித்த போது அவர்களது பரிதாபகரமான தலை, கடந்த பன்னிரண்டு நூற்றாண்டுகளாக மனித கோட்பாடுகளினாலான தப்பறையான போதகங்களினால் மிகவும் மோசமாக அடைக்கப்பட்டு குழப்பத்தில் இருந்தன. அவர்கள் வேதாகமத்தை அதன் சொந்த வெளிச்சத்தில் பார்க்க தயாராயிருக்கவில்லை. அவர்கள் இந்த விசுவாச அறிக்கை போன்றவைகளின் வெளிச்சத்தில் பார்க்கவே தயாராயிருந்தார்கள். மேலும் அவர்கள் நீண்ட காலமாக விசுவாச அறிக்கையை சந்தேகப்படுகிறவர்கள் மதபேதம் உடையவர்கள் என்றும் அப்படி மதத்திற்கு எதிரான கருத்துடையவர்களுக்கான தண்டனை நரகம் என்றும் போதிக்கப்பட்டிருந்தார்கள். ஆகையால் பின் தொடர்ந்து வருகிற வேத ஆராய்ச்சி எல்லாம் இதே கோணத்தில்

இருக்கும்படியே முயற்சிக்கப்பட்டன.

இது தவறு என்றும், வேதாகமமானது அதனது சொந்த வெளிச்சத்திலே ஆராய்ச்சிபண்ணப்பட்டிருக்க வேண்டும் என்றும் இப்போது வேதமாணவர்கள் காண்கிறார்கள். விசுவாச அறிக்கைகைகள் குழப்பமான தப்பறைகள் நிறைந்ததாக இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட இடத்தில் தேவனுடைய வார்த்தைகள் உண்மையிலேயே எந்தவித விளைவையும் ஏற்படுத்தவில்லை. தற்போது நமது வேத ஆராய்ச்சியெல்லாம் வித்தியாசமாயிருக்கின்றன. ஏனெனில் இந்த காரியங்களில் தெளிவான அறிவை உடையவர்களாக இருக்கிறோம். இன்னும் நாம் புது யுகத்தின் விடியலில் ஜீவிக்கிறோம். ''ஞானவான்கள் உணர்ந்து கொள்வார்கள்'' (தானியேல் 12:10) என்று சொல்லப்பட்ட பிரகாரம் தேவனுடைய பிள்ளைகள் அவரது வசனத்தை புரிந்து கொள்வார்கள் என்று அவர் வாக்குத்தத்தம் பண்ணிய நாட்களில் நாம் ஜீவிக்கிறோம்.

## இஸ்ரயேலர்களுடனான தேவனுடைய தொடர்பு

நமது வசனம் இஸ்ரயேல் தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தே சொல்லப்பட்டது. கீழ்ப்படியாமையின் நிமித்தமாக தேவன் தம்முடனான விசேஷித்த ஐக்கியத்தை தகப்பனாகிய ஆதாம், தாயாகிய ஏவாள் மற்றும் அவர்களது பிள்ளைகளுடனும் துண்டித்துக் கொண்டார். அவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரரானதால், ''நீங்கள் சாகவே சாவீர்கள்'' என்று கூறி மரணதண்டனை கொடுத்தார். (ஆதி 2:7) ஆனால் இந்த தண்டனையைக் கூட தேவன் துரிதப்படுத்தவில்லை. பாவிகளை முடிந்தவரை வாழவிட்டார்.

தேவனுடைய தயவு ஆபிரகாமின் சந்ததியாராகிய ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யாக்கோபின் பிள்ளைகளிடம் வெளிப்படுத்தப்பட்டது. சீனாய் மலையில் மோசே மூலமாக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் வாக்குத்தத்தின் மூலமாக பன்னிரண்டு கோத்திரத்தாரையும் ஒரே தேசமாக்கி தேவன் அவர்களை கூட்டிச் சேர்த்து ஐக்கியப்படுத்தினார். தேவனுடைய பிரமாணத்தை அவர்கள் கைக்கொண்டால் என்றென்றும் ஜீவிப்பார்கள் – சாகவே மாட்டார்கள். மேலும் அவர்கள் எல்லாவற்றிலும் – அவர்கள் உடல்நலம், அவர்களது மந்தை, அவர்களது கால் நடைகள், அவர்களது ஆடு, மாடுகள் அனைத்தும், ஆசீர்வாதம் பெறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஆனால் அவர்கள் மற்றவர்களைப் போல பாவத்தில் பிறந்ததால் அவர்களால் நியாயப்பிரமாண உடன்படிக்கையை கைக்கொள்ள முடியவில்லை. எனினும் நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க முயற்சி செய்வதின் மூலம் அவர்களை, தேசத்தை அதிகமாக ஆசீர்வதிக்க தேவன் திட்டமிட்டார். அதே போல நடந்தது. உண்மைதான், அவர்களது தவறுகளிலும், குறைவுகளிலும் அவர்களை தண்டித்தார். ஆனால் அதை அன்புடனும் செய்தார். மேலும் முற்றிலுமாக அவர்களை தள்ளிவிடவில்லை. அவர்களது தேச அளவிலான துன்பமும் சிறையிருப்பும் அவர்களுக்கு தேவையான பாடங்களை போதிப்பதற்கான தண்டனையாகும்.

இப்படியாக தேவகிருபை இந்த தேசத்திற்கு தொடர்ந்தது. மற்ற எந்த தேசங்களுடனும் அல்ல. இந்த கிருபை யாக்கோபின் மரணத்திலிருந்து இயேசுவின் மரணம் வரை 1845 ஆண்டுகள் தொடர்ந்தது. இயேசுவை மறுதளித்து அவரை சிலுவையில் அறைந்ததினிமித்தம் தேசம் தள்ளிவிடப்பட்டாலும், இயேசுவின் பக்கம் இருந்த ஆவிக்குரியவர்களுக்கு கிருபை தொடர்ந்து கிடைத்தது மாத்திரமல்ல. இன்னும் மேன்மையான கிருபைக்கு பெந்தெகொஸ்தே நாளிலிருந்து வந்தார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, இனி மோசேயின் கீழாக வீட்டின் பணிவிடைக்காராய் இல்லாமல், இயேசுவின் கீழாக வீட்டின் புத்திரராக ஆனார்கள். (எபிரேயர் 3:5,6) தேவன் தேசத்தை தள்ளிவிட்டிருந்த பொழுதும், மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு கிருபை திரும்ப கிடைக்கக் கூடிய காலம் வரும் என்று தெளிவாக அறிவித்தார். (ஆமோஸ் 9:11, 12 ; அப். 15:13–17)

## தேவனுடைய புதிய ஜாதி (தேசம்)

இந்த காலக் கட்டத்தில் உத்தம இஸ்ரயேலர்களாய் இருந்த பரிசுத்த யூதர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு உட்கருவாக இருந்தார்கள். இந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை பரிசுத்த பேதுரு, ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படித் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீக ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் அவருக்கு சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள்'' என்று கூறுகிறார்.

பிறகு சபையானது தேவனுடைய புதுசிருஷ்டியாக சுவிசேஷ யுகத்தில் விசேஷித்த விதமாக தேவன் தொடர்பு கொண்டிருக்கும் புது ஜாதியாக இருக்கிறது. அவர்கள் இயேசுவின் மகா ஆயிர வருட யுக ராஜ்யத்தில் அவருடன் ஒன்றிணைந்து இருக்கும்படியாக அவர்கள் போதிக்கப்படும்படியாகவும் அபிவிருத்தி அடையும்படியாகவும் அவர்களுடன் தேவன் தொடர்பு கொண்டிருக்கிறார். பிறகு வானத்திற்கு கீழிருக்கிற ஒவ்வொரு தேசத்திலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்பட்ட அவரது பரிசுத்த கூட்டத்தாரும் அவரும் சேர்த்து ஆயிர வருடம், மாம்சீக இஸ்ரயேலரையும் உலகின் அனைத்து ஜாதிகளையும் ஒளியுடனும், அறிவுடனும் அவர்களை உயர்த்தும் வண்ணமாக ஆசீர்வதிப்பார்கள். ஆதாமினால் இழந்ததும் கல்வாரியில் மீட்கப்பட்டதுமான தேவ சாயலுக்கு திரும்பவும், பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்கவும் செய்வார்கள்.

இந்த விசேஷித்த வேலைக்காகத்தான், சபையை உக்கிரமான சோதனையில் ஈடுபடுத்தினார். வேதம் கூறுகிறதாவது: ''நாம் அநேக உபத்திரங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.'' (அப்.14;22) அர்ப்பணம் பண்ணப்பட்டவர்களாகிய இந்த வகுப்பார். சபை பாகுபாடில்லாமல், அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் யாரும் தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த சபையினது நாமங்கள் ஆட்டுக்குட்டியானவரின் புத்தகத்தில், பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்கால வாழ்வில் தங்களது விசுவாசத்தையும் தேவனிடத்தில் உண்மைத் தன்மையையும் விளங்கப்பண்ணுகிறார்கள். முன் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக் கையிலானவர்கள் செயல்பட்டு, தங்கள் மரணபரியத்தம் தங்களது விசுவாசத்தை விளங்கப்பண்ணினால், பிறகு பரிசுத்த ஜாதி நிறைவு பெறும்.

தேவனுடைய மகா வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்துக்கு உரியது. இவர்களைக் குறித்து பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: ''நீங்கள்

கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.'' (கலாத்தியர் 3:8, 16, 29) வாக்குத்தத்தமானது ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டதாவது: "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.'' (ஆதியாகமம் 22:18) கிறிஸ்துவும் அவரது சபையும் தான் ஆவிக்குரிய சந்ததி, அவர்களது வேலை தேவனுடைய ஏற்ற காலத்தில் மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிப்பது என்கிற பரிசுத்த பவுலின் வார்த்தையை பெற்றிருக்கிறோம். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம்'' என்று சொல்லும்பொழுது, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது உயிரோடிருக்கிறவர்கள் மாத்திரமல்ல, மற்றவர்களும், இதற்கு முன் வாழ்ந்திருந்த அனைவரையும் குறிப்பிடுகிறது. நமது தலைப்பு வசனத்தில் தேவனுடைய தயவு ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு என்று விசேஷமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது மாம்சீக இஸ்ரயேலரோடு கூட மற்றனைவரையும் குறிப்பிடுகிறது

### தெய்வீக தயவின் அகலம்

நாம் இப்பொழுது தெய்வீக தயவு மற்றும் கிருபையின் உச்சத்திற்கு வருகிறோம். யூத தேசம் சிறியதாக இருந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேல், சபையும் சிறியது. ஆனால் தேவனுடைய கிருபையும் தயவும் முழு மனுக்குலத்திற்கும் விரிவடைந்திருக்கிறது–கிறிஸ்து மரித்த ஒவ்வொரு ஜீவிக்கும். உலகத்தோடு தொடர்பு கொண்டு, தேவதயவையும், கிருபையையும் பெறுவதற்கான நேரம் பிதாவானவரால் முன்னரே நியமிக்கப்பட்டிருக்கிறது. அது ஆயிரவருடயுகம் – கிறிஸ்துவின் ஆயிர வருட ஆளுகை, அவர் பூமிக்குரிய மகா ஆவிக்குரிய ராஜாவாக இருப்பார். அந்த ஆயிர வருட யுகத்தில் அவரது சபை அவருடன் இணைந்தவர்களாக உடன் சுதந்தரராக, உதவி ஆட்சியாளர்களாக மனுக்குலத்தின் போதகர்களாக, உயர்த்துபவர்களாக, வெகுமதியளிப்பவர்களாக, தண்டனை அளிப்பவர்களாக இருப்பார்கள். உலக மனுக்குலத்திற்கான இந்த அனைத்து சேவைகளும் அவர்களுக்கு அளிக்கப்படும் நோக்கத்தினாலாகும். தேவ தயவும் தேவ கிருபையும் ஆரம்பத்திலிருந்தே அவரால் திட்டமிடப்பட்டிருந்தது. இது மேசியாவின் மகிமையான ராஜ்யத்தின் மூலமாக மனுக்குலத்திற்கு கொண்டு வரப்படக்கூடியதாக இருக்கிறது.

ஆயிர வருட காலத்திற்கு நீதியின் சூரியன் உதித்து தேவனைப் பற்றிய அறிவின் வெளிச்சத்தை பூமிக்கு ஏராளமாக கொண்டு வரும். அந்த ஆயிர வருடமளவும் சாத்தான் யாரையும் மோசம் போக்காதபடி கட்டப்படுவான். அதே ஆயிரம் வருடத்தில் தான் இழந்ததை திரும்ப பெறுதலும் ஆசீர்வாதமும் அளிக்கப்படும் வேலை நடக்கும். ஆயிர வருடம் முழுவதும் இது நடைபெறும். தேவனுடைய அன்பு, அவருடைய ஞானம் மற்றும் தயவு இவையனைத்தும் இயேசு கிறிஸ்து மூலமாகவும் அவருக்குள்ளும், மையப்படுத்தப்பட்டுள்ளது, வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காணும்படியும், அறியும்படியும் புரிந்து கொள்ளும்படியும் ஒவ்வொரு ஜீவியின் புரிந்து கொள்ளும் கண்கள் திறக்கப்படும். தேவ புத்திரர் முழு சுதந்திரம் அடைந்து பாவம் மற்றும் மரணம் என்னும் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கும் நோக்கத்துடன் தேவ தயவு உலகத்திற்கு அப்பியாசப்படுத்தப்படும். இந்த சுதந்தரம் ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு இருந்த சுதந்தரம். (ரோமர் 8:19–23)

இப்படியாக நாம் கடலின் விசாலத்தைப் போல தேவனுடைய தயவின் விசாலத்தை காண்கிறோம். முதலில் அவரது கிருபை பூமிக்குரிய ஒரு தேசத்திற்கு மட்டும் இருந்து, அதன் பிறகு தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கூட்டத்திலிருந்து எல்லா தேசத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டு, கடைசியில் உலகெங்கிலும் இருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும், அளிக்கப்படும். இது அனைவருக்கும் முழு அளவில் அன்பு, அறிவு, கீழ்ப்படிதல் மற்றும் ஆசீர்வாதம் ஆகியவைகளின் சந்தர்ப்பத்தையும் சலுகைகளையும் கொண்டு வரும்.

## R5811 The Secret of His Presence

## அவரது பிரசன்னத்தின் இரகசியம்

''அவரது பிரசன்னத்தின் இரகசியத்தில்
என் ஆத்துமா மறைந்து கொள்ள எவ்வளவு சந்தோஷம்;
ஓ, இயேசுவில் நான் கற்கிற பாடங்கள்.
எவ்வளவு விலையேறப்பெற்றதாக இருக்கின்றன.
பூமிக்குரிய கவனிப்பு விரக்தியடையவே செய்கிறது.
சோதனைகள் என்னைத் தாழத் தள்ளுவதில்லை.
சாத்தான் என்னை சோதிக்க வரும்பொழுது
நான் போய்விடுவேவன் இரகசிய இடத்திற்கு

''கர்த்தரின் இந்த இரகசியத்தின் இன்பத்தை
நீ அறிய விரும்புகிறாயா?
போய், அவரது நிழலின் கீழே மறைந்துகொள்.
இதுவே உனது பரிசாக இருக்கும்.
அந்த சந்தோஷமான சந்திக்கும் இடத்தின்
மவுனத்தை விட்டு விலகும்போது,
ஆண்டவரின் சாயலை உன் முகத்தில்
அணிந்துகொள்ள கவனமாயிருக்க வேண்டும்.''

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, C.T. ரசல் அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, R. செல்வராஜ். சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

FOR PRIVATE CIRCULATION ONLY